உ

# சக்தி சிவனின் அருளாட்சி



ஆ. கதிர்காமத்தம்பி

( இந்நூலாசிரியரும், விநாயகர் அருள்கூர் சைவநூற் பதிப்பாளரும் )

வல்வெட்டி.

அச்சகம்
சந்நிதியான் ஆச்சிரமம்
தொண்டைமானாறு.

[illegible]
[illegible]

அன்பளிப்பு

ஆ. சதிர்காமத்தம்பி
முன்னாள் அதிபர், யா/வல்வெட்டி இ.த.க. பாடசாலை
கவிஞர், நூலாசிரியர்
வல்வெட்டி விநாயகர் அ. சைவ பரிபாலகர்
வல்வெட்டித்துறை

உ

சிவமயம்



# சக்தி சிவனின் அருளாட்சி



நூலாசிரியர் ;

ஆ. கதிர்காமத்தம்பி

விநாயகர் அருள்கூர் சைவநூற் பதிப்பாளர்

வல்வெட்டி.

பதிப்புரிமை : ஆசிரியருக்கு

முதற்பதிப்பு : ஆவணி 2001

அச்சுப்பதிப்பு : அச்சகம் - சந்நிதியான் ஆச்சிரமம்
தொண்டைமானாறு

ஆசிரியருக்குப்பின் பதிப்புரிமை :
சந்நிதியான் ஆச்சிரம
சைவ கலை பண்பாட்டுப் பேரவைக்கு உரியது

## விநாயகர் அருள்கூர் சைவநூற் பதிப்பாளரின் வெளியீடுகள்

1. வல்வெட்டி வேவில் வீரகத்தி விநாயகர் ஆலய தலபுராணம் — 1998

2. சக்தி சிவனின் அருளாட்சி — 2001

சிவமயம்

சிவாகம சித்தாந்த ஞான தேசிகபானு
பிரதிட்டாலங்கார சித்தாந்த சாகரம்
அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபைத்தலைவர்
சமாதான நீதவான்
வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானப் பிரதமகுரு

**சிவஸ்ரீ சோ. தண்டபாணிகதேசிகர் அவர்கள்**

வழங்கிய

# வாழ்த்துரை

ஆன்மா என்பது பாவ புண்ணியத்திற்கு ஏற்றவாறு பிறவிகளை எடுக்கின்றது. புண்ணிய வசத்தினால் நமக்கு மானுடப்பிறவி கிடைத்துள்ளது. இம் மானுடப் பிறப்பிலும் நாம் சைவராக ( சைவசமயத்தைச் சேர்ந்தவராகப் ) பிறப்பதற்குப் பல பிறப்புக்களிற் தவஞ் செய்திருக்க வேண்டும். சைவராகப் பிறக்கும் பேறுபெற்ற நாம் எமது சமயத்திற்கு ஏதாவது நல்ல காரியங்களைச் செய்துதானாக வேண்டும். இதனை நன்குணர்ந்த திரு. ஆ. கதிர்காமத்தம்பி ஆசிரியர் அவர்கள் பல அரிய நூல்களை அவ்வப்போது வெளியிட்டு வருகின்றார். அதன் வழியில் தற்பொழுது " சக்தி சிவனின் அருளாட்சி " என்ற நூலை வெளியிட்டிருக்கின்றார்கள். இந்த நூல் இதுவரை எவரும் எழுதாத வகையில் சக்தி சிவனின் அருளாட்சி பற்றி மிகவும் விளக்கமாகவும் விரிவாகவும் எழுதியுள்ளார். இது நம் எல்லோருக்கும் பயன் உடையதாக இருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இவர் மென்மேலும் பல பயன்தரும் நூல்களை வெளியிட்டுச் சைவத்தொண்டு புரிய அவருக்கு எல்லா நலன்களும் கிடைக்க வேண்டுமென்று அன்னையை வணங்கி வேண்டுதல் செய்து அவரின் நற்பணி வளர வாழ்த்துகிறேன்.

2001 - 05 - 06 சிவஸ்ரீ சோ. தண்டபாணிகதேசிகர் J. P.

உ

சைவப் புலவர் பண்டிதர்

திரு. கை. நமசிவாயக்குருக்கள் அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துரை

"பொருளுணர்ந்து சொல்லுவார் சொல்வர் சிவபுரத்தி னுள்ளார்" எனும் மாணிக்கவாசகர் வாக்குக்கு அமையச் "சக்தி சிவனின் அருளாட்சி" நூல் நூற்பொருளோடு வெளி வருகிறது. இந்நூலை அருளாக்கி அளிக்க ஆசிரியர் ஆ. கதிர்காமத்தம்பி அவர்கள் முன்வந்திருப்பது மகிழ்ச் சிக்கு உரியது. ஆனந்தமாகப் பாடுவதும் தேடுவதும் தரவல்ல இந்நூலை இலை மறை காய் போல வாழும் ஆசிரியர் ஆக்கியமை வியப்புக்குரியது. இந்நூல் பயனுடையது என் பதைச் சைவ உலகம் ஏற்றுக் கொள்ளும் செய்யுள் நூல் களைக் கற்போர் தொகை மிகக்குறைவு. கற்போர் தொகை யிலும் பொருள் விளங்குவோர் விரல் விட்டு எண்ணக் கூடி யவர்களே. முன்னை வினையின் தொடர்ச்சியினால் முகிழ்த்த மலரின் வாசம்போலச் சிந்தைமலர உடல் மலர்ந் தது இந்நூல் எல்லோரும் பயன்பெற வேண்டும் என்னும் பெருநோக்கத்தை ஆசிரியர் அவர்கள் தொழிற்படுத்தியுள் ளார். இறையின்பம் பெருகும் வண்ணமாக மூர்த்தி, தலம், தீர்த்தப் பெருமையைக் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து எமக்குத் தந்தமை சக்தி சிவன் அருள் வண்ணமே.

தத்துவமும் சமயமும் இணைத்த நிலையை இந் நூலிற் காணலாம். சைவ சித்தாந்த அறிவும் சமய பக்தியும் தமிழாற்றலும் நிரம்பிய ஆ. கதிர்காமத்தம்பி அவர்களின் பணியை வாழ்த்தாமலிருக்க முடியாது. உடல் நலமும் உள நலமும் சிறப்புற்று அமைய வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமானை இறைஞ்சுகிறோம். அவனை இறைஞ்ச அனுபந்தம் உதவி செய்யும்.

வாழ்க அவன் பணி வளர்க அவன் பணி

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி
18-05-2001

திரு. கை. நமசிவாயக்குருக்கள்
பண்டிதர் சைவப்புலவர்

உ

சிவமயம்

யாழ். பல்கலைக்கழகம்

உயர்பட்ட ஆய்வுபீடப் பீடாதிபதி

பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துரை

" சக்தி சிவனின் அருளாட்சி " என்னும் இப் பாமாலையைத் திரு ஆ. கதிர்காமத்தம்பி அவர்கள் எழுதியுள்ளார். இந்நூலுக்கு ஒரு வாழ்த்துரை எழுதும்படி அடியேனை அவர் கேட்டுள்ளார். இச் சிறிய வாழ்த்துரையை இந் நூலுக்கு எழுதுவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

காப்பு துதி, அவையடக்கம் ஆகியனவற்றுக்கான செய்யுட்களுக்குப் பின்னர் வரும் பாடல்கள் நான்கு பெரும் பகுதிகளாக பிரித்து அமைக்கப்பட்டுள்ளன. சக்தி சிவனின் நவபேத ஆட்சிச்சருக்கம் என்பது முதலாவது பகுதியாகும். இறைவனுடைய படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று செயல்களையும் மிகச் சிறப்பான முறையிலே புலவர் புலப்படுத்துகிறார்.

" பண்பார் உழவன் பயிரினை நாட்டியே
நன்னீர் உரமும் நன்முறை பாய்ச்சலால்
நண்ணும் முதிர்வில் நயம்பெற அறுப்பரே
அண்ணல் ஆற்றும் முத்தொழில் அன்னவே "

ஒரு கமக்காரனுடைய செயற்பாடுகளை உவமைகளாகக் காட்டி இறைவன் செயற்பாடுகளை உணர்த்தும் கவிஞருடைய திறன் பாராட்டுக்குரியது.

'' சக்தி சிவனின் அருள் மூர்த்தங்களின் சருக்கம்'' என்பது இரண்டாவது பகுதியாகவும், '' சக்தி சிவனின் அருள் மூர்த்தங்களின் சருக்கம் – இந்தியாவில் '' என்பது மூன்றாவது பகுதியாகவும், '' சக்தி சிவனின் அருளாட்சிச் சருக்கம் ஈழத்தில் '' என்பது நான்காவது பகுதியாகவும் அமைகின்றன. சில திருப்பதிகங்களும் கூட்டுப் பிரார்த்தனை மலர்களும் அனுபந்தங்களாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

இறையருளிலும் இயற்கை எழிலிலும் ஆசிரியர் மிகுந்த ஈடுபாடு கொண்டு பாடுகின்றார். இறைவனின் அருட்கோலக் காட்சிகளை ஆசிரியர் மனத்திலே இருத்தி அவற்றை அருமையான தமிழ்ச் சொற்களிலே பா வடிவங்களாக ஆக்கியுள்ளார்.

இந் நூலுக்கு ஒரு சிறப்புண்டு. இச் செய்யுட்களைப் பாடிய ஆசிரியரே இவற்றுக்கு உரையினையும் எழுதியுள்ளார். இது படிப்பவர்களுக்கு இலகுவாயிருக்கும். ஆசிரியர் எல்லோருடைய பாராட்டுக்கும் உரியவராகிறார்.

ஆசிரியருடைய பாடல்திறன் மேலும் பல புதுப் பாமாலைகளை வழங்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**
பீடாதிபதி, உயர்பட்ட ஆய்வு பீடம்

உ

சிவமயம்

யப்பான் கக்சுயின் பல்கலைக்கழக வருகை ஆய்வாளர்

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள்

வழங்கிய

## வாழ்த்துரை

மனித வாழ்க்கைக்கு என்றும் உறுதுணையாக இருப்பது இறையருளே. மனிதனின் ஆற்றலுக்கு மேலான ஒரு பேராற்றல் அவனுக்கு என்றும் துணை நிற்பதை மனிதன் நன்கு உணர்ந்து கொண்டால் துன்பத்திற்கு இடமில்லை. ஆனால், அதனை அவன் உணர்ந்துகொள்ள ஆவன செய்ய வேண்டும். அதுவே இன்றைய சிறந்த பணியாகும். வையத்துள் வாழ்வாங்கு வாழும் முறையைப் பயிற்றும் தொண்டு உள்ளம் கொண்டவர் இப்பணியை முன்னின்று செய்ய வல்லவராவர். இறையருளை உணர்ந்த நமது முன்னோர், தாம் உணர்ந்தவற்றைப் பின்னோரும் அறியும் வண்ணம் பல முயற்சிகளைச் செய்துள்ளனர். தமது வழிபாட்டுப் பயிற்சியினால் பெற்ற அனுபவத்தைப் பிறர் அறியும் வண்ணம் நூல் வடிவிலே ஆவணம் செய்துள்ளனர். தாம் செய்யும் முயற்சியால் அனைவரும் பயன்பெறவேண்டும் எனப் பணியாற்றும் இத் தொண்டர்களில் ' சக்தி சிவனின் அருளாட்சி ' என்னும் நூலைப் புனைந்த திரு. ஆ. கதிர்காமத்தம்பியும் ஒருவராவார். அவருடைய வாழ்வியலூடாகப் பெற்ற இறையனுபவத்தைப் பற்றி விதந்துரைக்க எனக்கு ஆற்றல் இல்லை. எனினும், நூலாசிரியரிடம் இயல்பாகவே ஊறிக் கிடந்த நற் பண்புகளினாலும் வழிபாட்டுப் பயிற்சியினாலும் பெற்ற இறையனுபவத்தை வெளிப்படுத்தியிருக்கும் பாங்கு எல்லோருக்கும் வழிகாட்டுவதாயுள்ளது.

இத்தகைய வழிகாட்டலே இன்றைய சமூகப் பணியாகவும் அமைவது பாராட்டுக்குரியது. முன்னோர்களின் வழிகாட்டல் மரபைத் தொடரும் திரு. ஆ. கதிர்காமத்தம்பி எமக்குச் சிறந்த வழிகாட்டியாக உள்ளார். அவரது பணி சிறக்க இறைவன் துணைநிற்க வேண்டுவது எனது பணியென எண்ணுகிறேன். அவரது மாணவியாக ஓராண்டு காலம் கல்வி பயிலக் கிடைத்த பேற்றை இச் சந்தர்ப்பத்தில் நினைவு கூருவதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**
வருகை ஆய்வாளர்
கச்சுயின் பல்கலைக்கழகம்
யப்பான்

□

உ

சிவமயம்

**யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர்**

**கலாநிதி S. சிவலிங்கராசா அவர்கள்**

வழங்கிய

## வாழ்த்துரை

மதிப்புயர் ஆசிரியர் ஆ. கதிர்காமத்தம்பி அவர்கள் யாத்த "சக்தி சிவன் அருளாட்சி" என்னும் நூலைப் பார்த்தேன், படித்தேன் பரவசமானேன்.

சைவமும் தமிழும் செழிப்புற்று வழங்கும் வடமராட்சியிலே காலத்திற்குக் காலம் பல நூற்றுக் கணக்கான பதிகங்களும் பக்திப் பாமாலைகளும் தோன்றியுள்ளன. வல்வை ச. வைத்தியலிங்கம்பிள்ளை, உடுப்பிட்டி. சிவசம்புப்புலவர், மேலைப்புலோலி நா. கதிரவேற்பிள்ளை முதலானோர் தொடக்கம் அண்மையில் அமரத்துவம் அடைந்த பண்டிதர் க. வீரகத்திவரை பக்தியைப் பாடாத அறிஞர்களே இப்பகுதியில் இல்லையெனலாம். சைவமும் தமிழும் செழித்துவளரும் இப்பிரதேசத்தின் இன்றைய பிரதிநிதியாக ஆசிரியர் ஆ. கதிர்காமத்தம்பி விளங்குகின்றார்.

பக்தியால் முதிர்ந்து பலகாலும் இறைவனையே பாடும் ஆசிரியர் பல நூல்களை ஆக்கித் தந்திருக்கின்றார்.

இந்நூலாசிரியர் சைவாசாரசீலர். அனுபூதிமான் இளமை தொட்டே இறைவழிபாட்டோடு ஒன்றியவர். அவரின் பக்தி அனுபவத்திற்கு வடிகாலாகக் கவிதையைக் கைப்பற்றி இருக்கின்றார். ஆழ்ந்த அனுபவஞானமும் அறிவும் 'சங்கமிக்கும் ஒரு 'ஞானப்புலமையை' இவரிடம் காணுகின்றோம்.

சக்தி சிவனின் அருளாட்சிக்குள் அகப்பட்டு ஆண்டவனின் திருவருட் கடாட்சத்தை, அவனின் திருவிளையாடல்

களைத் தனது மனத்திரையிலே நிழற்படமாகப் பதித்துப் பின்னர் பதிவு செய்திருக்கிறார் எனலாம்.

என்றும் அழியாது நின்று நிலைக்கும் இயல்புடைய சைவத்தின் சிறப்பினை, இறை தத்துவத்தினை, இனிமை யான தமிழிலே ஆசிரியர் பாடித் தந்திருக்கின்றார். '' அர்ச் சனை பாட்டே ஆகும் '' என்ற எண்ணக் கருத்தினை மனங் கொண்டு போலும் ஆசிரியர் சக்தி சிவன் அருளாட்சியை வழங்கியிருக்கின்றார்.

இந்தியத் திருத்தலங்களோடு ஈழத்திருத் தலங்களையும் இணைத்துப் பாடியமை, ஈழத்துப் புலமைப் பாரம்பரியத் திற்குச் செழுமை சேர்க்கின்றது எனலாம்.

'பக்தியின் மொழி தமிழ்' என்ற கருத்துக்கு அரண் சேர்க்கும் பணியினை ஆசிரியர் செய்ய முயன்றிருக்கின்றார்.

உடல்நலம் குன்றி இருந்தபோதிலும் 'உளம்' மிக நலமாக இருப்பதை இவரது பாடல்கள் தெளிவாகக் காட்டி நிற்கின்றன.

ஆசிரியர் திரு. ஆ. கதிர்காமத்தம்பியின் இறைபணியும் புலமையும் இணைந்து வாழவேண்டும் அவரது பணிகள் தொடர வாழ்த்துவோமாக.

கலாநிதி எஸ். சிவலிங்கராசா
3 - 06 - 2001 தலைவர் தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

உ

சிவமயம்

பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்
தலைவர், இந்து நாகரிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் – இலங்கை
அவர்கள் வழங்கிய

# அணிந்துரை

'' அன்பே சிவம் '' என்று திருமூலர் போற்றித் துதித்த வாறு சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானச் சிந்தனைத் தொகுப்பாக அமையும் இந்நூலை ஆக்கியளித்தவர் வல்வெட்டியைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபர் திரு. ஆ. கதிர்காமத்தம்பி ஆவார் தமது வாழ்நாளில் ஆசிரியப் பணியின் ஊடாக சமூகப்பணிகளிலும் தம்மை இணைத்துக் கொண்டவர். இலங்கையின் பல"பாகங்களிலும் ஆசிரியப் பணியாற்றிய அனுபவமிக்கவர். 1998 ஆம் ஆண்டு வல்வெட்டியில் கோயில் கொண்டெழுந்தருளி அருள்பாலிக்கும் அருள்மிகு வேவில் வீரகத்தி விநாயகர் ஆலய தலபுராணத்தினைப் பாடியவர். இந்நூல் எழுதியமைக்காக இந்நூலாசிரியர் இந்துசமய கலாசார திணைக்களத்தினால் விருது வழங்கி பாராட்டப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

'' சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான் ''

என மணிவாசகப் பெருமானின் திருவாக்கிற் கேற்ப ' சக்தி சிவனின் அருளாட்சி ' என்ற தலைப்பில் இறைவன் புகழ் பாடும் திறத்தில் இந்நூல் உருவாகியுள்ளது. எம் பெருமானின் தெய்வீகப் பெருமைகளை யாவர்க்கும் உணர்த்தும் ஓர் அரிய தொண்டாக நூலாசிரியர் இதனை மேற்கொண்டுள்ளார். ' மேன்மைகொள் சைவ நீதியை

உலகறியச் செய்யும் ஓர் அரிய முயற்சியே இப் படைப்பு எனில் மிகையில்லை. "யாதாயினும் ஒரு சமயத்தை மெய் யென்று நம்புகின்றவன் அந்தச் சமயத்தின் வழி ஒழுகும் ஒழுக்கமில்லாதபோது பயன்பெறான். அந்தச் சமயத்திற் குரிய கடவுள் இவர் என்பதும் அவருடைய இலக்கணங் களும் அவரால் விதிக்கப்பட்ட புண்ணியங்களும் விலக்கப் பட்ட பாவங்களும் அந்தப் புண்ணிய பாவங்களின் பலன் களாகிய சுகதுக்கங்களும் அவரை வழிபடும் முறையையும் அந்த வழிபாட்டினாலே பெறப்படும் நன்மையும் ஆகிய இவைகளை அறியும் அறிவு உதியாதபோது அந்த ஒழுக்கம் உண்டாகாது என்ற நாவலர் பெருமானது வாக்கிற்கேற்ப எம்பெருமானது அருளாட்சிச் சிறப்புக்களை யாவரும் அறிந்துகொள்ளக்கூடிய வகையில் நான்கு சருக்கங்களாக 100 பாடல்களில் புராணக் கதைகள் ஊடாகவும், எம் பெருமான் கோயில் கொண்டு அருள்பாலிக்கும் தலங்களின் பெருமைகளைக் கூறும் வகையிலும் அவரது அருள் மூர்த் தங்களின் சிறப்பைப் போற்றுவதன் மூலமும் ஆசிரியர் இந் நூலை உருவாக்கியுள்ளமை பாராட்டிற்குரியதாகும் இந் தியாவிலும் இலங்கையிலும் விளங்கும் சிவத்தலங்களின் பெருமைகள் சிறப்பாக இந்நூலில் எடுத்துக் கூறப்பட் டுள்ளன. ஆசிரியரின் இவ்வரிய முயற்சியைச் சைவ உலகம் மனமுவந்து வரவேற்கும் என்பதில் ஐயமில்லை.

இப்பாடல்கள் இறைவன் புகழைப் பாடுதற்கேற்றவாறு எதுகை மோனையுடன் கூடிய கவிதை நடையில் அமைந் துள்ளன. அத்துடன் நூலாசிரியரே அப்பாடல்களின் பொருளை அனைவரும் அறிந்து நயத்திடக்கூடிய வகையில் உரையையும் கூடவே தந்துள்ளமையும் சிறப்பம்சமாகும். எடுத்துக் காட்டாக தென்னகத்தில் திருப்பெருந்துறையின் பெருமைகளைக் கூறுமிடத்து,

"மருவிய வாதவூரன் மனங்கொள்ளும் வகையினிலே
அருளுரை வழங்கியதால் அருட்கோலம் பூணவைத்த
பெருந்துறை வீற்றிருக்கும் பேரருளின் குன்ற மன்னான்
திருவடி சென்னி சேர்க்கத் தீவினைகள் விலகிடுமே."

எனவும் திருக்கேதீசுவரப் புகழ் பாடுமிடத்து

கேதெென்பான் வழிபடவே வேண்டியதைக்கொடுத்த பிரான்
சாதுக்கள் வணங்கிடவும் சம்பந்தன் பாடிடவும்
வாதுபுரி சுந்தரன் தான் வண்டமிழழை ஓதிடவும்
ஆதுலர் மகிழ்ந்திடவும் அருள்வாரி சொரிவாரே.

எனவும் ஆசிரியர் அத்தலங்களுக்குரிய சிறப்புக்களை நயம்பட உரைக்கின்றார். எமது சமய மரபில் சிறப்பிடம் பெறும் ஆலயங்களின் ஐதீகங்களையும் வரலாற்றுச் செய்திகளையும் உள்ளடக்கியதாக இப்பாடல்கள் அமைந்துள்ளன. சிவ வழிபாட்டினால் எமக்குக் கிட்டும் பயன்களும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

இந்நூல் இளந்தலைமுறையினரிடையே சமய அறிவை வளர்க்கப் பெரிதும் உதவும். ஆசிரியர் பலதடவைகள் மேற்கொண்ட தென்னிந்திய தலயாத்திரைமூலம் பெற்ற அனுபவங்களை இந்நூலின்வழி அனைவரோடும் பகிர்ந்து கொள்வதோடு ஏனையோரையும் தலயாத்திரைக்கு ஆற்றுப்படுத்துவதாகவும் அமைகின்றது. இந்நூல் சிவனது சிந்தையை எம்மனதில் தோற்றுவிப்பதோடு அவனது தாளைப்பற்றி நற்கதிபெற எம்மைத் தூண்டுகின்றது.

ஆசிரியர் திரு. ஆ. கதிர்காமத்தம்பி தமது துணைவியாருடன் இத்தகு அருமையான சிவப்பணியைத் தொடர்ந்து மேற்கொண்டு மேலும்பல அரிய நூல்களை இயற்றிச் சைவப் பணியாற்ற வேண்டுமென்பதே சைவ உலகத்தின் எதிர்பார்ப்பாகும். அத்தகைய அரிய முயற்சியில் நூலாசிரியர் வெற்றி பெறவும் நல்ல தேகசுகத்துடன் பல்லாண்டு காலம் இனிதே வாழ்ந்து சைவப் பணியைத் தொடரவும் எல்லாம் வல்ல ஸ்ரீ பார்வதிசமேத பரமேஸ்வரனின் திருவருள் பொலிய வேண்டும் என பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

**பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணஐயர்**
தலைவர், இந்துநாகரிகத்துறை

உ

சிவமயம்

# முன்னுரை

சைவ சமயத்தவராகிய யாம், சிவபெருமானையே முழுமுதற் கடவுளாக வழிபடுவோராவர். சிவபெருமானது அருளின் இயக்கப் பாட்டினையும், சிவசக்தி துணையாய் இருந்து இயங்குவதையும், பல நூல்கள் விளக்கியுள்ளன. அவை சாதாரண மக்களால் இலகுவாக விளங்கக் கூடியவை அல்ல.

சக்தி சிவன் பற்றிச் சிவாகமங்களும், சிவஞான போதம் முதலாம் சித்தாந்த சாத்திரங்களும், அருமையாய் விளக்கியுள்ளன. ஆயின் அவற்றைக் கற்கவும், உணரவும், உணர்ந்தவற்றை எடுத்துப் பிறர்க்கு விளக்கமாக எடுத்துரைக்கவும் வல்ல அறிஞர்கள் மிகச் சிலரே உள்ளனர்.

மேற்கூறிய நூல்கள் பெரும்பாலும் இலக்கண வரம்பின் பாற் பட்டன. இலக்கணம் அறிவை வளர்த்தாலும், இலக்கிய நூல்களே வாழ்க்கைப் பயனை அதிகம் ஊட்டுவனவாகும். சமய வாழ்க்கையில் அம்மையப்பர் - சக்தி சிவனின் – அருளாட்சியின் சாதனைகளை-அருட் செயல்களை–உள்ளவாறு விளங்கவைப்பன திருவிளையாடற் புராணம் பெரியபுராணம் முதலிய இலக்கிய நூல்களாகும். இன்னும் பிரத்தியட்சமாக அறிய வேண்டுமாயின், சக்தி சிவன் எழுந்தருளியிருக்கும் திருத்தலங்களையே நாம் நாடவேண்டும்.

அவ்வாறாய திருத்தலங்களை, இந்தியாவிலும் ஈழத்திலும் பரக்கக் காணலாம். அத்தலங்கள் தோறும் சக்தியும் சிவனும் அடியார்க் கடியவர்களாகி, அவர்களின் பக்திநிலையிற் பரவசமாகி, அருள்செய்யுந் திருவிளையாடல்கள் எண்ணில் அடங்கா அவற்றை நாம் முழுமையாக அறியமுடியாது முயன்றால் ஓரளவேனும் அறியலாம். அவ்வாடல்கள் அருட்செயல்கள் - ஒவ்வொன்றும் அருளாட்சியின் ஒவ்வோர் அம்சத்தைத் தெளிவு படுத்துவனவாகும். படிப்போரைக் கேட்போரை ஈர்த்துப் பரவசப் படுத்துவனவாகும். அவை ஒவ்வொன்றும் ஒவ்வோர் அமிர்த குளிகைக்கு ஒப்பானவையாகும். அமிர்த குளிகை, உண்டாரின் பிணியை நீக்கி வாழவைக்கும் தன்மையது. அருட்செயல்கள் படிப்

போரைக் கேட்போரைத் தம்பால் ஈர்த்து; அறியாமையை அகற்றிப், பக்திவழியில் நடக்கவைப்பன. அருள் ஆடல்கள், அடியார்கள் தம் வாழ்க்கையில் கண்டு அனுபவித்த உண்மையான அருள் நிகழ்வுகளாகும் நாம் எவ்வளவுக்கு எவ்வளவு பக்தியோடு இறைவன் தாளை இறுகப் பற்றுகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு இறைவனின் அருள் கிடைத்தே தீரும். இதற்கு அடியார்கள் நாயன்மார் சரித்திரங்கள் சான்றாகும் திருநாவுக்கரசர் மிகுந்த பக்தி வலிமையோடு காலால் நடந்தும், கைகளாற் தவழ்ந்தும், தலையால் நடந்தும், உருண்டும் கைலைக்காட்சி கண்டே மீளுவேன் என்ற உறுதியோடு சென்று, களைத்துக்கிடக்கும் போது, இறைவன் முனிவராக வந்து, குளத்துள் மூழ்கச்செய்து, திருவையாற்றில் மிதக்கச்செய்து கைலைக்காட்சியைக் காண்பித்தார். இவ்வாறே பிட்டுவாணிச்சியம்மையார் நிலை, நமிநந்தியடிகள் நிலை, திருக்குறிப்புத் தொண்டர் நிலை, என்பன இறைவன் தாளை இறுகப்பற்றிய நிலைகளாகும். இறைவன் பக்திக்கு ஆட்பட்டு அருள் செய்யும் இந்நிலையை அடியார்கள் சரித்திரத்திற் பரக்கக் காணலாம்.

எனவே சைவர்களாகிய யாம், சக்தி சிவனின் அருளாட்சியை அறிந்து உய்யச் சிறந்த திருத்தலங்கள் பற்றியும், அத்தலங்களில் நிகழ்ந்துள்ள அருளாட்சியில் நிகழ்ந்த அருட்செயல்கள் பற்றியும் அறிதல் பெரும்பயனுடைத்தாகும்.

அடியேன் சைவச்சூழலில் வளர்க்கப்பட்டவன். எனது பிதா காலை மாலை பிரார்த்தனை வழிபாடு செய்தே உண்பவர் அப்பண்பு அடியேனையும் ஆட்கொண்டு விட்டது. மிக இளவயதிலேயே அருள்மிகு வாலாம்பிகாசமேத வைத்தீசுவரரின் ஆலயத்தை வலம் வரும் பழக்கம் அடியேனிடம் ஏற்பட்டது. நாளடைவில் அதிகாலையில் நீராடி ஆலயத்தை அடைந்து மெழுகி, அலகிட்டுத் தூநீர் விசிறிச் சரியைத் தொண்டுகள் செய்யத் திருவருள் வழிப்படுத்தியது. முற்று முழுதாகச் சைவ மக்களே வாழும் நமது கிராமத்தில் கிறிஸ்தவமத பாடசாலை இயங்கிச் சிறார்களைக் கிறிஸ்தவ மதத்திற்கு ஈர்க்கும் போதனைகளைச் செய்து வந்ததினால் வருந்திய அடியேன் வல்வெட்டியிற் சைவப் பாடசாலையை உருவாக்கி, அதை வளம்படுத்துவதிலேயே எனது வாழ்க்கையைக் கழித்து வந்தேன் ஆயினும் சரியைத் தொண்டுகளைக் கைவிடாது தொடர்ந்து செய்து வந்தேன். சக்தி சிவனின் திருவருள் ஈர்த்ததினால் நான்கு முறைகளுக்குமேல் தென் இந்திய

தலயாத்திரைகளைச் செய்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. மதுரை, சீர்காழி, வைத்தீஸ்வரன் கோயில், பாபநாசம், குற்றாலம், இராமேஸ்வரம், திருஅருணாசலம், கச்சிஏகம்பம், திருத்தில்லை, திருவாரூர், முதலாய திருத்தலங்களைத் தரிசித்து வழிபடத் திருவருள் கைகூட்டியது. அதனால் ஏற்பட்ட அனுபவங்களும், கேள்வி ஞானமும் சக்தி சிவனின் அருளாட்சியில் ஈடுபட வைத்தன. அடியேன் பெற்ற இன்பத்தை ஏனைய அன்பரும் பெற வழிசெய்தல் கடனென்ற உணர்வு தூண்ட அம்மையப்பர் அருள் உந்துசக்தியாக ஊக்கிடவே, சக்தி சிவனின் அருளாட்சியாகும் இந்நூல் உருவாகியது.

வடமராட்சி வன்செயல் உக்கிரமாக நடந்தவேளையில், அருள் மிகும் வல்வெட்டி வேவில் விநாயகப்பெருமான் ஆலயத்தில் அவரையே தஞ்சமெனத் தங்கி இருந்தோம். அப்பொழுது அப்பெருமானின் திரு அருளால் ஈர்க்கப்பட்டேன். அப்பெருமான் என்னைப் பாடவைத்தார். அதன் பயனாக 1998-ம் ஆண்டு அருள்மிகும் வல்வெட்டி வேவில் வீரகத்தி விநாயகர் ஆலயத் தலபுராணம் என்னும் நூல் உருவாகி அப்பெருமான் முன்னிலையிலேயே அரங்கேறி இலங்கை இந்துசமய கலாச்சார அலுவலகத்தின் சிறப்பு விருதினையும் பெற்றது.

அப்புராணம் விருத்தப்பாவால் இலகு நடையில் ஆக்கப்பட்டதாயினும், படித்த அன்பர்கள் பலரே தம்மால் குறித்த பொருளை நன்கு விளங்க முடியவில்லை என்று குறைபட்டுக்கொண்டதை மனதில் இருத்திச் சுந்தரமூர்த்தி நாயனாரை எம்பெருமான் தடுத்தாட்கொண்ட போது, ''எனக்கு அர்ச்சனை பாட்டே'' என்று கூறியதை நினைவு கூர்ந்து, இந்நூலில் இடது பக்கத்திற் சக்தி சிவனின் அருளாட்சியைப் பா நடையிலும், அதன் பொழிப்பை வலது பக்கத்தில் வசன நடையிலும் அமைக்கத் திருவருள் பாலித்துள்ளது.

அத்துடன் அடியார்க்குப் பயன்தரும் வகையில், சிவனருட்போற்றித் திருப்பதிகம், சிவசக்தி போற்றித் திருப்பதிகம், அருள்மிகும் தில்லை நடராசர் கூத்து, தில்லை நடராசர் திருப்பதிகம் என்பன அநுபந்தங்களாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

இக்காலங்களிற் கூட்டுப் பிரார்த்தனை, ஆலயங்களில் நிகழும் சக்திமிக்க வழிபாடாகத் திகழ்கிறது. கூட்டுப் பிரார்த்தனையின்

போது மனம் புலன் வழிசெல்லல் தடுக்கப்படுகிறது. உள்ளம் இறைவன் பால் ஈர்க்கப்படுகிறது. மனம் துதிக்கிறது. நா தோத்திரங்களைச் சொல்லுகிறது, சரீரம் வணங்குகிறது, எனவே அப்பர் சுவாமிகள் "பொருந்தக் கைதொழ" என்று கூறியாங்கு, மனம் வாக்குக் காயம் மூன்றும் பொருந்தி ஒருவழிப்பட வழிபாடு நிகழ்கிறது.

இதன் சிறப்பியல்பு யாதெனின், பிரார்த்தனையில் ஈடுபடுகின்ற எல்லோருடைய தொனியும், ஒரே தொனியில் இறைவன் புகழை ஓதுவதாகும். அத்தொனி சக்திமிக்க மந்திரமாகித் திருவருளை ஈர்த்துக், கருணைமழை பொழியச் செய்கிறது. எனவே ஆலய வழிபாட்டில், கூட்டுப்பிரார்த்தனையையும் அங்கமாகச் சேர்த்தல் பயனுடைத்தாகும். நிகழும் கூட்டுப் பிரார்த்தனையும் எவ்வெக் கோவிலில் நடைபெறுகிறதோ, அவ்வக் கோவிலின் மூலமூர்த்தியின் திருநாமங்களே - மந்திரங்களே- மீண்டும் மீண்டும் ஒலித்தல் பெரும்பயனுடைத்தாகும்,

இது எதுபோலுமெனின், நாம் சென்னையில் நிகழும் நிகழ்ச்சிகளை வானொலிப் பெட்டியிற் கேட்கவேண்டுமாயின், மத்திய அலை வரிசையில் அதற்குரிய மீற்றரைத் தொடர்பு கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் சென்னை வானொலி நிலையத்தில் நிகழும் நிகழ்ச்சிகளை, நாம் கேட்க முடியும். ஏனைய மீற்றர்களைத் தொடர்பு கொள்வதினால் அவ் நிகழ்ச்சிகளைக் கேட்க முடியாது. அதுபோலவே, சிவனது திருவருளை ஈர்க்க வேண்டுமாயின், சிவபெருமானுடைய திருநாமங்களை - மந்திரங்களை - புகழை மீண்டும் மீண்டும் ஒலிக்கச் செய்தலே சாலச் சிறந்ததாகும். அவ்வகையில் சிவாலயங்களுக்குப் பயன்படும் வகையில், சிவாலயங்களில் ஓதுதற்குரிய கூட்டுப் பிரார்த்தனை மலர்கள், அநுபந்தம் 5-ல் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்நூலை உருவாக்கும் பணியில் அம்மையப்பர் திருவருள் உந்து சக்தியாக நின்று வழிநடத்த, எனது நண்பரும், சைவ சித்தாந்த பண்டிதரும், ஞானபண்டித இயலரசுமாகிய திரு. க. முத்துவேலு அவர்கள் பார்வையிட்டு ஊக்குவித்தும், சிறப்புப்பாயிரம் ஈந்தும் உதவியமைக்காக அன்னாருக்கு எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

சித்தாந்த ஞானதேசிக பானுவும், பிரதிட்டாலங்கார சித்தாந்த சாகரமும், அகில இலங்கைச் சைவக் குருமார் அர்ச்சகர் சபைத் தலைவரும், சமாதான நீதவானும், வல்வை முத்துமாரி அம்பாள் ஆலயப் பிரதம குருவும் ஆகிய சிவஸ்ரீ சோ. தண்டபாணிகதேசிகர் அவர்கள், பூசா கிரியைகளைப் பக்தி பூர்வமாகச் செய்து பக்தர்களைப் பரவசப் படுத்துகிற சைவ சமயக் கிரியா விற்பன்னர் ஆவர். குருப் பட்டம் தரித்த காலத்திருந்தே அன்னார் அடியேனுடன் நன்கு பழகியவர். அம்பாள் ஆலயத் தொண்டில் அடியேன் ஈடுபட்டிருக்கும் காலங்களிற் சமய நெறிகள் பற்றிற் கலந்துரையாடியவர். அன்னார் இந்நூற்கு மனமுவந்து அளித்த வாழ்த்துரைக்காக உளங்கனிந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன்.

தமிழ் இலக்கண இலக்கியங்களை நன்கு தேர்ந்த பண்டிதரும், சைவ ஆகம நூல்களை நன்கு பயின்ற சைவப் புலவரும், மாணவர் உவக்கக் கற்பிக்கும் சிறந்த ஆசிரியரும், சோதிடக்கலை விற்பன்னரும், கிரியா விற்பன்னரும், எனது நண்பருமாகிய திரு. கை. நமசிவாயக் குருக்கள் இந்நூலை ஆராய்ந்து தந்த வாழ்த்துரைக்காக அன்னாருக்கு எனது மனமார்ந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன்

வாழ்த்துரைகள் நிமித்தம் யாழ் - பல்கலைக்கழகத்திற்குச் சென்ற பொழுது, உபசரித்து இன்னுரை கூறி, இந்நூற்கு அணிந்துரையும் வாழ்த்துரையும் அளித்த யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர் அவர்களுக்கும், தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராசா அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன்.

தமிழிற்கும் சைவத்திற்கும், ஈழத்திலும் வெளிநாடுகளிலும் பெருந் தொண்டாற்றி, மணிவிழாச் சிறப்புகளைப் பெற்று மிளிரும், யாழ் பல்கலைக்கழக உயர்பட்ட ஆய்வுபீடப் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களும். பூரிப்புடன் இந்நூற்கு அளித்த வாழ்த்துரைக்காக எனது உளம் கனிந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன்.

யப்பான் கக்சுயின் பல்கலைக்கழக வருகை ஆய்வாளரும், ஈழத்திலன்றி யப்பானிலும் சைவத்தையும், தமிழையும் வளர்க்க அரும்பணி ஆற்றிவருபவரும், தமிழர் மரபினையும் சிறப்பாக தமிழ்ப் பெண்களின் ஒழுக்கத்தையும் பரப்பி வருபவருமாகிய கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அம்மையாரும், அடியேனிடம் முன் கல்வி பயின்ற

மையை ஞாபகப்படுத்தி தனது குருவெனப் போற்றி இந்நாலை ஆராய்ந்து வாழ்த்துரை தந்தமைக்காக மனமார்ந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன்.

இப்பணி தொடங்கிய நாளில் இருந்து வழி நடாத்திய சகதர்மினியினது உந்து சக்தியே, அம்மை அப்பர் திருவருளை அடுத்துநின்று இந்நூல் சிறப்பாக வெளிவர உதவியது

இவ் வருள் நூல் சிறுவர் முதல் பெரியோர்வரை யாவருக்கும் விளங்கும்வகை பெரிய எழுத்தில் சிறப்பாக அழகிய படங்களுடன் அச்சிடுவித்து, உரியகாலத்தில் உதவியதோடு, நூல் வெளியீட்டிற்கு உதவும் வகை மண்டபத்தையும் தந்து ஏனைய எல்லா உதவிகளையுஞ் செய்து, நூல் வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற உதவிய சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர்க்கும், சிறப்பாக மயில்வாகன சுவாமிகளின் குருவருளையும் சந்நிதி முருகப் பெருமானின் திருவருளையும் நிறைவாகப் பெற்று, நாடிவரும் அடியவர்களின் பசியை நீக்கியே வைத்து, அரும் பெரும் அன்னதானப் பணியை ஆற்றுவதோடு சைவப் பெருமக்களின் அறிவுப் பசியையும் நீக்கும் விருந்தாக, ஞானச்சுடர் என்னுஞ் சஞ்சிகையையும் நடாத்திவரும் ஆச்சிரம சுவாமிகள் அவர்களுக்கும் மிகுந்த கடப்பாடுடன் உளம் கனிந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன்.

இந் நூலைத் திருத்தமாக அச்சிடும் பணியில் அச்சக உரிமையாளருக்கு அமைவாக அயராது உழைத்து அடியேனுக்குதவிய திரு. வ. யோகநாதன் அவர்களுக்கும், ஏனைய ஊழியர்களுக்கும் அம்மை அப்பர் அருளைப் பிரார்த்திப்பதோடு கடப்பாடுடன் நன்றியைத் தெரிவிக்கிறேன்.

இப் பணியில் அடியேனை வழிநடத்திய அட்டமூர்த்தியாய் எண்குணசம்பந்தனாய் சச்சிதானந்தப் பேரொளியாய் நவபேதனாய் உலகினை இயக்கி உலகுயிர்கட்கெல்லாம் அம்மை அப்பனாய் மிளிரும் பார்வதி பரமேசுவரனை - வாலாம்பிகா சமேத வைத்தீசுவரப் பெருமானை - மீனாட்சி சுந்தரேசுவரனை - சிவகாமி சமேத நடராசப் பெருமானை வழிபாடு செய்து உள்ளத்திருத்தி நிறைவு செய்கிறேன்.

ஆ. கதிர்காமத்தம்பி
நூலாசிரியரும்,
விநாயகர் அருள்கூர் சைவநூற் பதிப்பாளரும்

வல்வெட்டி.
14 - 07 - 2001

உ

சிவமயம்

# சிறப்புப் பாயிரம்

( கலிவெண்பா )

அருள்நூலின் ஆக்கம் அருளின் வயத்தே
தெருளுறு மாறு திகழ்வாய்ப் — பெருகலாம்
பக்தி நெறிக்கோர் பனுவலே யாகிய
சக்தி சிவனருள் ஆட்சியில் — தொக்க
சிவநவ பேதங்கள் சக்திநவ பேதம்
தவநிலை தன்னிலே தந்து — நிவப்பாக
மன்னருள் மூர்த்த மகேஸ்வரர் தம்மது
இன்னருள் திறத்தை இயம்பினர் — மன்னுசீர்
முத்தித் தலங்களின் முன்னருட் சான்றுகள்
சித்த மதனிலே தேக்கினர் — அத்தன்
திருவால வாயிலிற் செய்ததிரு ஆடல்
அருளது கூட்ட அருளிப் — பெருகவே
பஞ்சபூ தத்த தலங்களின் திவ்வியம்
விஞ்சை அமிர்தாய் விரித்தனர் - விஞ்சு
இலங்கையாம் தீவினில் இன்னருள் தலங்கள்
புலங்கொளு மாறு புகட்டி - நலன்சேர்க்கும்
வல்வை நகரினில் வைத்தீசர் ஆண்டவருள்
மல்கு சிறப்பாய் வழங்கினர் — நல்லநல்ல
சித்தாந்த தத்துவங்கள் சீர்சால் வரலாறு
அத்தன் அருள்கொண்டு ஆய்ந்தனர் — பக்திசேர்
வித்தக ராம்கதிர் காமத் தம்பியாம்
சித்தம் இனியார் சிறந்து.

இமையாணன் கிழக்கு,
வல்வெட்டித்துறை.
2001 - 05 - 10

பண்டிதர் சித்தாந்த பண்டிதர்
ஞான பண்டித இயலரசு
க. முத்துவேலு

உ

சிவமயம்

# உள்ளுறை

காப்பு

துதி

அவை அடக்கம்

நூல்

1. சக்தி சிவனின் நவபேத ஆட்சிச் சருக்கம்

2. சக்தி சிவனின் அருள் மூர்த்தங்களின் சருக்கம்
   1. தட்சணாமூர்த்தி
   2. அர்த்த நாரீசுவர மூர்த்தி
   3. கல்யாண சுந்தர மூர்த்தி
   4. சோமாஸ்கந்த மூர்த்தி
   5. இலிங்கோற்பவ மூர்த்தி
   6. பிக்ஷாடண மூர்த்தி
   7. உமாமகேசுவர மூர்த்தி
   8. நடராசமூர்த்தி

3. சக்தி சிவனின் அருளாட்சிச் சருக்கம் - இந்தியாவில்
   1. காசி
   2. திருக்காளத்தி
   3. திருத்தில்லை — பொது

      அருட்செயல்கள் :
      1. நந்தனுக்கருளியமை
      2. புத்தனை வாதில் வெல்ல அருளியமை
      3. திருவாதவூரருடன் இரண்டறக் கலந்தமை
      4. பதஞ்சலியும் புலிப்பாதரும் வேண்ட நடனமாடியமை,

4. திரு ஆலவாய் – மதுரை (பொது)

அருட்செயல்கள் :

1. தடாதகைப் பிராட்டி திருமணம்
2. கல்யானைக்குக் கரும்பருத்தியதும் பன்றிக்குட்டிகளுக்குப் பாலூட்டியமையும்
3. நரிகளைப் பரிகளாக்கியமை
4. மண் சுமந்து பிரம்படி ஏற்றமை
5. விறகு வெட்டியாக வந்தமை
6. கரிக்குருவிக்கு உபதேசமும் நாரைக்கு முத்தியும் ஈந்தமை
7. கால் மாறி ஆடிய கூத்தும் சிவலோகங் காட்டியமையும்
8. தருமி பொற்கிழிபெற உதவியமை
9. தாயாகிப் பணிவிடை செய்தமை
10. மாதுலனாகி வந்து வழக்குரைத்தமை
11. வன்னியுங் கிணறும் இலிங்கமுஞ் சாட்சிகளாக அழைத்தமை

5. இராமேசுவரம்
6. திருத்தோணிபுரம் (சீர்காழி)
7. திரு அருணாசலம் (திருவண்ணாமலை)
8. திருப்பெருந்துறை
9. திருவாரூர்
10. திருக்கச்சியேகம்பம்
11. திருவீரட்டானம் (திருவதிகை வீரட்டானம்)
12. திருவையாறு
13. திருமறைக்காடு (வேதாரணியம்)

4. சக்தி சிவனின் அருளாட்சிச் சருக்கம் - ஈழத்தில்

1. திருக்கோணேசுவரம்
2. நகுலேசுவரம்
3. முன்னேசுவரம்
4. திருக்கேதீசுவரம்

5. ஒட்டுசுட்டான் தான்தோன்றீசுவரம்
6. கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீசுவரம்
7. வண்ணை வைத்தீசுவரம்
8. சட்டநாதர் கோவில்
9. கொழும்பு பொன்னம்பலவாணேசுவரம்
10. வல்லை வைத்தீசுவரம் - பொது

அருட்செயல்கள் :

1. வைத்தீசர் வண்டாகி வழித்துணை ஈந்தமை
2. புத்திரப் பேறீந்து உயிர் காத்தமை
3. மனக்குறை தீர்த்து மாண்பளித்தமை
4. சிறு நோய்கள் தீர்க்க வழிவகுத்தமை
5. திருஐந்தெழுத்தோத வழித்துணை ஈந்தமை

11. ஈழத்துச் சிதம்பரம் - காரைநகர்

பூர்த்தி

வாழ்த்து

அநுபந்தம் : 1
சிவனருள் போற்றித் திருப்பதிகம்

அநுபந்தம் : 2
சிவசக்தி போற்றித் திருப்பதிகம்

அநுபந்தம் : 3
அருள்மிகும் தில்லை நடராசர் அருட்கூத்து

அநுபந்தம் : 4
தில்லை நடராசர் திருப்பதிகம்

அநுபந்தம் : 5
சிவாலயங்களில் ஓதுதற்குரிய கூட்டுப்பிரார்த்தனை மலர்கள்

அநுபந்தம் : 6
சிவபெருமானை வழிபடற்குரிய அர்ச்சனை மலர்கள் (நாமங்கள்)

அநுபந்தம் : 7
சக்தி வழிபாட்டிற்குரிய அர்ச்சனை மலர்கள் (நாமங்கள்)

சிவமயம்

# சக்தி சிவனின் அருளாட்சி

திருச்சிற்றம்பலம்

## காப்பு

பெற்றோர் உவந்திடும் பிள்ளையாம் ஐங்கரனே
நற்கருணைப் பேற்றை நவிலும் — பொற்பமைந்த
சக்தி சிவனின் அருளாட்சி யாம்இதற்குச்
சித்தியினை ஈவாய் சிறக்க.

## துதி

ஏகமாஞ் சிவனே எங்கும் நிறைந்து
பாகமாஞ் சக்தி உடனாய் அமர்ந்து
ஆகமம் போற்ற அருளாட்சி செய்து
போகமும் ஈவான் பொற்பாதம் பணிவாம்.

சிவனார் உறையுந் தெய்வத் தலங்கள்
கவர்ச்சி உறவே கருத்தாய் அமர்ந்து
பவங்கள் நீக்கப் பணிவார் தம்மின்
அவலம் அகற்றும் தாயைப் பணிவாம்.

## அவையடக்கம்

சக்திசிவன் அருளாட்சிச் சமுத்திரமாம் அதனிடையே
புக்கடியேன் பெற்றிட்ட கேட்டிட்ட பேறுகளை
அக்கணிவோன் அன்பர்களும் அனுபவிக்க ஈங்குரைத்தேன்
பக்தியுடன் அதிற்புகுந்து பயனதனைப் பெறல்கடனாம்.

எத்திக்கும் நிறைந்துள்ள எம்பெற்றார் சிறப்புரைத்தே
முத்திவழி செலுத்துகின்ற மோனம்உரை இந்நூலை
பக்திவழி நின்றாய்ந்து பயனதனைக் கைக்கொண்டு
மற்றதனை மறந்திடுதல் மாண்புடையோர் கடனாகும்.

உ

சிவமயம்

## நூல்

## சக்தி சிவனின் நவபேத ஆட்சிச் சருக்கம்

பா நடை :

திருச்சிற்றம்பலம்

உயர்வாம் ஒழுங்கில் சுத்த சிவமாய்ப்
பயில்வார் தவத்தைப் பக்தர் எவர்க்குந்
துயர்தீர் காட்சி தோன்றா நிலையில்
இயல்பாய் இறங்கிச் சுகமே புரிவார் 1

அருவமோ டுருவம் அருவுரு ஆகிய
திருவருட் தோற்றத் திருமேனி கொள்கிறார்
உருவிலாச் சிவம்சக் திநாதமு டன்விந்தினை
மருளகல் யோகி வழியினிற் தெளிவரே, 2

உருவினில் வினையின் வழிகளால் அலைந்து
அயர்வுறும் உயிர்கள் அவனியிற் பிறந்து
பயனுறும் வழிசெய் படைத்தலை நிகழ்த்த
அயன்தனை அதிட்டித் தருள்பவன் அவனே. 3

தரித்திடு பிறவிக்குத் தகுதியாய் ஈந்திடு
விரிதனு கரணமுடன் விளங்கிடும் புவனமும்
உரிமையில் நுகர்வதாலே உய்வழி தேர்ந்திட
அரிதனை அதிட்டித்துக் காப்பவனு மவனே. 4

விதிவழியே நடத்தலினால் வினைகளை ஆற்றியே
கதிதன்னைத் தேராது கருத்தழி உயிரினம்
புதியதாய் உலகினிலே பூர்த்திசெய் பயனுற
அதிட்டித்தே உருத்திரனை அழிப்பவ னுமவனே. 5

உ
சிவமயம்

# நூல்

## சக்தி சிவனின் நவபேத ஆட்சிச் சருக்கம்

உரை நடை :

1. சிறப்பாகிய சொரூப நிலையிற் சித்த முத்த சுத்த உருவாகி ஒன்றிலுந் தோய்வின்றித் தானே சுயம்பிரகாச மாகித் தன் உண்மை நிலையில் நிற்குஞ் சுத்தசிவன் தவத்தினர், பக்தர்கள், அறிஞர்கள் எவர்க்குந் தோற்றாதவனாகி இருக்கும் நிலையில் இருந்து ஆன்மாக்களுக்கு அருள் செய்யவேண்டிப் பொது நிலையாகுந் தடத்த நிலைக்கு இறங்கி,

2. அருவம் உருவம் அருவுருவமாகிய மூவகைத் திருமேனிகளை உடையவராகிறார். உருவமற்ற சிவம் சக்தி நாதம் விந்து ஆகிய நான்கு திருமேனிகளையும் யோகவழியில் நிற்பவர் உணர்வர்.

3. உருவத் திருமேனிகளில் நல்வினை தீவினை காரணமாகப் பிறந்திறந்து உழலும் உயிரினம் பூமியிலே பிறந்து பாவக்கட்டறுத்து வீடுபேறு பெறும் வழியிற் செல்லும் படியாகப் பிரமதேவனை அதிட்டித்துப் படைத்தலைச் செய்பவனும் அப்பெருமானே.

4. ஆன்மாக்களுக்கு அவர்கள் செய் வினையின் பிரகாரம் எடுக்கும் பிறப்பிற் கேற்பக் கொடுக்கப்படுகின்ற தனுகரண புவன போகங்களை உரியவாறு அனுபவித்து வீடுபேறடையும் வழியை உணர அவற்றில் அழுத்தி விஷ்ணுவை அதிட்டித்து நின்று காத்தற் தொழிலைச் செய்பவனும் அப்பெருமானே.

5. கொடுக்கப்பட்ட பிராரத்துவ வினைகளின்படி நடக்கும்போது புதிய ஆகாமிய வினைகளை ஆற்றித் தாஞ்செல்ல வேண்டிய வீடுபேற்றை அடையும் வழியை நாடாது அழிவை நாடுகின்ற உயிரினம் மீண்டும் பூமியிலே பிறந்து வீடுபேற்றை அடையும் வழியை நாட உருத்திர மூர்த்தியை அதிட்டித்து அழித்தற்தொழிலைச் செய்பவனும் அப்பெருமானே.

பா நடை :

பண்பார் உழவன் பயிரினை நாட்டியே
நன்னீர் உரமும் நன்முறை பாய்ச்சலால்
நண்ணும் முதிர்வில் நயம்பெற அறுப்பனே
அண்ணல் ஆற்றும் முத்தொழில் அன்னவே. 6

பெற்றிடும் வினையைப் பிறந்திடுஞ் சீவன்
சிற்றறிவினாலே தெரியினும் நிகழ்வில்
நற்செயல் தீமை ஞாபகம் உறினும்
உற்றிடும் வாழ்வில் உறுதுயர் அடைவான். 7

அந்நிலை மாற்றி அவனியில் வாழ்தலினால்
தன்னிலை தவறா துய்நெறி நாடிடவே
மன்னிய மகேசு வரன்தனை அதிட்டித்து
இன்புற என்றும் மறைத்தலை இயற்றுவனே. 8

அருளுணர் யோகிகள் அருவென ஏனையோர்
உருவெனப் பணிந்துமே உளங்கனிந் துருகிடத்
திருவருள் சுரந்திடு திருவுடைச் சதாசிவ
அருவுரு மேனியில் அருள்பவ னுமவனே. 9

அருவுரு வாகும் அமலனும் என்றும்
திருப்பொலி இலிங்கத் திருவுரு வமர்ந்து
மருவிய அன்பர் மகிழ்வுடன் செய்யும்
அருட்பணி ஏற்று அருளினைப் புரிவனே. 10

அருவதில் அம்மைதான் சிவமதின் சக்தியாய்
கருதுறு நாதமு டனிணையும் விந்துவாய்
அருவுரு வாகிய சதாசிவ மூர்த்தியின்
அருளுடை மனோன்மணிச் சத்தியாய் அருள்வரே. 11

உரை நடை :

6. சிறந்த கமக்காரன் ஒருவன் பயிரை நட்டுப் பசளையும் நீரும் இட்டுக் காத்துவந்து அப்பயிர் விளைந்து முதிர்ந்த பருவத்தில் அவற்றின் பயன் நோக்கி அவனே அப்பயிர்களை வெட்டுகின்றான். எம்பெருமான் படைத்தல் காத்தல் அழித் தற் செயல்களைச்செய்வதும் அவ்வுழவனது செயல் போன்ற தாகும்.

7. பிறப்பினை எடுத்த ஆன்மாக்கள் தாம் முற்பிறப்பிற் செய்த நன்மை தீமைகளை உணர்வதாலும் இப்பிறப்பிலே தமக்கு நேர்ந்த நன்மை தீமைகளை நினைத்துக் கொண்டே இருப்பதனாலும் சிற்றறிவின் காரணமாகப் பொருந்திய அப்பிறப்பில் அவற்றை மீண்டும் மீண்டும் நினைத்து வாழ் வில் மேல்வருவனபற்றிச் சிந்தியாது வருந்துவர்.

8. எனவே ஆன்மாக்கள் அந்நிலைமைகளையே நினைத் துக்கொண்டு இராமல் உய்யும் நெறியாகிய நன்னெறிகளை நாடும்படியாக மகேசுவர மூர்த்தியை அதிட்டித்து மறைத் தற் றொழிலைச் செய்பவனும் அப்பெருமானே.

9. திருவருள் வழிநிற்கும் யோகிகள் அருவத்திருமேனி என வும் ஏனையோர் உருவத்திருமேனி எனவும் வணங்கி மனம் நெகிழ்ந்து உருகி நிற்கத் திருவருளைச் சுரக்கின்ற பெருமை பொருந்திய சதாசிவமாகிய இலிங்கத் திருமேனியில் வீற்றி ருந்து அருளைச் செய்பவனும் அப்பெருமானே.

10. அருவுருவாகிய எம்பெருமான் எந்நாளும் தெய்வத் தன்மை ஒளிரும் சிவலிங்கத் திருமேனியில் அமர்ந்து அன் பர்கள் மனப்பூர்வமாகச் செய்கின்ற அருட்பணிகளை ஏற்று அவரவர்கட்கேற்றவாறு திருவருளினைச் செய்தருளுவார்.

11. தாயானவள் அருவத் திருமேனியில் சிவத்திற்குச் சக்தியாகியும் நாதத் திருமேனிக்கு விந்துவாகியும் அருவுரு வாகிய சதாசிவ மூர்த்திக்கு அருளைச் செய்கின்ற மனோன் மணிச் சக்தியாகியும் விளங்கி அருளைச் செய்வார்.

பா நடை ;

உருவதில் படைத்திட உற்றிடு வாணியை
அருள்புரி காத்தலில் அம்புயத் திருவினை
பொருந்திய அழித்தலில் போற்றுறும் உமையினை
மருவிய மறைத்தலில் மகேஸ்வரி தனையுமே 12

அருளுடன் அதிட்டித் தையனோ டிணைதலால்
திருவுடைத் தொழில்கள் சிறப்புடன் நிகழ்ந்திட
மருவிய உயிர்கள் மாயையின் நீங்கியே
திருத்திகழ் பதியைச் சேர்ந்திடச் செய்வரே. 13

## 2. சக்தி சிவனின் அருள் மூர்த்தங்களின் சருக்கம்

### 1. தட்சணா மூர்த்தி

முனிவர்கள் மெய்ப் பொருளை முறையாகத் தெளிதற்குக்
கனிவுடனே வேண்டிடவும் கல்லால நிழலின்கீழ்
இனிதமர்ந்தே மெய்ப்பொருளை இசைவாக உணர்த்திவைத்
தணியாத ஞானவுருத் தட்சணாமூர்த் தியானாரே. [ கத்

### 2. அர்த்த நாரீசுவர மூர்த்தி

பிருங்கியெனும் முனிவரது பேதத்தின் விளைவாலே
ஒருவிச்செல் கௌரித்தாய் உத்தமதாம் நோன்பியற்றப்
பெருமகிழ்வாய்க் காட்சியீந்து பிராட்டியாரும் மகிழ்ந்
உருப்பாதி கொடுத்தருளி அர்த்தநாரீ சுவரரானார். [திடவே

### 3. கல்யாண சுந்தர மூர்த்தி

பங்குனிமா தஉத்தரத்தில் பாங்குடனே மீனாட்சியை
மங்கலஞ்சேர் மதுரையிலே மணந்தருளிப் பாரினிலே
எங்ஙணுமே பொலிந்திடவும் எவ்வெவர்க்கும் அருள்செய்த
துங்கமுயர் மூர்த்தந்தான் கல்யாண சுந்தரராம். 16

உரை நடை :

12. உருவத் திருமேனிகளில் படைத்தற் தொழிலைச் செய்யச் சரசுவதியையும் காத்தற் தொழிலைச் செய்யச் செந் தாமரை ஆசினியாகிய இலக்குமியையும் அழித்தற் தொழி லைச்செய்ய உமையையும் மறைத்தற் தொழிலைச் செய்ய மகேசுவரியையும்.

13. அருளோடு அதிட்டித்து நின்று எம்பெருமானோடு இணைந்து அவரைப்பிரியாது ஐந்தொழில்களுஞ் சிறப்புடன் நிகழும்படி செய்து பொருந்திய ஆன்மாக்கள் கன்மங்களில் நின்றும் விடுபட்டு இருவினைஒப்பு மலபரிபாகமாகிய பக்கு வத்தை அடைந்து முத்தியடைய இறைவனைச் சேர்ந்திடச் செய்பவளும் அன்னையே.

## 2. சக்தி சிவனின் அருள் மூர்த்தங்களின் சுருக்கம்

### 1. தட்சணா மூர்த்தி

14. சனகர் முதலிய முனிவர்கள் வேதங்களை நன்கு கற் றும் உண்மைப் பொருளை உணரமுடியாது வருந்தி அதனை முறையாக உணர்வதற்கு இறைவனை அடைந்து இரந்து வேண்டி நிற்கக் கல்லால நிழலின் கீழ் தென்முகமாக வீற்றி ருந்து உண்மைப் பொருளை அவர்களுக்கு உணர்த்தி வைப் பதற்கு ஞானமூர்த்தியாகிய தட்சணாமூர்த்தியானார்.

### 2. அர்த்த நாரீசுவர மூர்த்தி

15. எம்பெருமான் பார்வதி சமேதராக வீற்றிருக்கப் பிருங்கி முனிவன் என்பவன் பார்வதியை விலக்கி எம்பெரு மானை வழிபட்டுச் செல்ல அதனாலே வருந்திய தாய் கேதாரகௌரி நோன்பை இயற்ற மகிழ்ச்சியடைந்து தாய் மகிழும்வகை காட்சியீந்து தனது உடலின் பாதியை அவருக் குக் கொடுத்து அர்த்தநாரீசுவர மூர்த்தியானார்.

### 3. கல்யாண சுந்தர மூர்த்தி

16. பங்குனி மாத உத்தர நட்சத்திரத்தில் மங்கலம் பொருந்திய மதுரையிலே மீனாட்சியம்மையாரைச் சிறப்பா கத் திருமணஞ் செய்து உலகம் முழுவதும் பொலிந்திட எல் லோர்க்கும் அருள்செய்த மிகுந்த பரிசுத்தராகிய மூர்த்தி தான் கல்யாண சுந்தர மூர்த்தியாகும்.

பா நடை :

### 4. சோமாஸ்கந்த மூர்த்தி

பரமனுடன் பார்வதியாள் சரவணத்தை அடைந்தாங்கு
உரனுடனே உலாவிவரும் குழந்தைகளை அன்புடனே
அரவணைக்கக் கந்தனாகி அவர்நடுவில் அமர்மூர்த்தம்
சுரர்போற்றுஞ் சோமாஸ்கந் தமூர்த்தியெனப் போற்றுவரே. 17

### 5. இலிங்கோற்பவ மூர்த்தி

அரியயன் தம்முள்ளே அமர்செய்யும் வேளையிலே
உரியதை விளக்கிடவே ஒளிமயமாய்த் தோன்றியாங்கு
இருவரும் அடிமுடிதே டிக்களைக்கச் சிவநிசியில்
இரவினில் அவர்முன்னே இலிங்கோற்ப வமூர்த்தி யானார். 18

### 6. பிக்ஷாடண மூர்த்தி

பேரெழில் மிளிர்ந்திடவே பிச்சாடண உருவுடனாய்த்
தாருகா இருடிகளின் தருக்கினையே அழித்தருள
வாரணி பத்தினிகள் மயங்கிடவே செல்தோற்றம்
பாருளோர் பரவுதல்செய் பிச்சாடண மூர்த்தியேயாம். 19

### 7. உமாமகேசுவர மூர்த்தி

இன்தவம் இயற்றுகின்ற இமவானின் மகளாகி
மன்னிய உமையினது மாண்புடைய தவத்தினையே
நன்மனத் தோடாய்ந்து நாயகனாம் உருக்காட்டி
ஒன்றிய மணக்கோலம் உமாமகேஸ்வ ரகோலமாகும். 20

### 8. நடராச மூர்த்தி

பவவிருள் நீக்கிப் பக்குவங்கள் பெற்றுமே
சிவகதி உயிர்கள் சேர்தற்கு ஐந்தொழில்
நவந்தரு நடனம் எந்நாளும் புரிபவர்
தவமுதிர் தில்லை நடராச மூர்த்தியே. 21

உரை நடை :

4. சோமாஸ்கந்த மூர்த்தி

17. சிவபெருமானுடன் பார்வதிதேவியார் சரவணப் பொய்கையை அடைந்து அங்கே உலாவிவரும் ஆறு குழந்தைகளையும் அன்புடனே ஒன்றாகக் கட்டி அணைக்க அவ்வாறு குழந்தைகளும் ஒன்றாக இணைந்து கந்தசுவாமியாகிப் பார்வதி பரமேசுவரன் மத்தியில் அமர அம்மூவருடைய திருக்கோல மூர்த்தத்தைச் சோமாஸ்கந்த மூர்த்தி எனப் போற்றுவார்கள்.

5. இலிங்கோற்பவ மூர்த்தி

18. பிரமா விஷ்ணு ஆகிய இருவரும் தம்முள்ளே யார் பெரியவர் எனப் பேதம் உற்றுப் போர்செய்யும் வேளையில் அவ்விருவர்க்கும் மேலாகத் தாம் விளங்குவதை விளக்குமுகமாக அவர்களிடையே அக்கினி மலையாகத் தோன்றிப் பிரமா முடியையும் விஷ்ணு அடியையுந் தேடிக் களைத்த வேளை அவர்க்கருள் செய்யச் சிவராத்திரியில் அர்த்த சாமத்தில் இலிங்கத்தினின்றும் இலிங்கோற்பவராகத் தோன்றியருளினார்.

6. பிக்ஷாடண மூர்த்தி

19. மிகுந்த அழகு விளங்கும்படியாகப் பிச்சை எடுப்பவனது உருவமுடனே தாருகாவனத்து முனிவர்களின் செருக்கினை அடக்கும்படியாகக் கச்சையணிந்த முனிபத்தினிகள் மயங்கும்படியாகச் சென்ற தோற்றமே உலகோர் துதிக்கின்ற பிச்சாடண மூர்த்தமாகும்.

7. உமாமகேசுவர மூர்த்தி

20. இனிய தவத்தைச் செய்கின்ற இமையமலை அரசனது புதல்வியாகிய உமாதேவியாரது தவத்தினை நன்மனத்தோடு ஆராய்ந்து நாயகனாகிய மகேசுவர வடிவத்தை உமையம்மையார் மகிழும்படி காட்டி நிகழ்த்திய திருமணக் கோலம் உமாமகேசுவர மூர்த்தமாகும்.

8. நடராச மூர்த்தி

21. ஆன்மாக்கள் பாசமாகிய இருளின் நின்றும் நீங்கி இருவினை ஒப்பு மலபரிபாகம் பெற்றுப் பரமுத்தி பெறுதற்காகப் பஞ்சகிருத்திய நடனத்தை எந்நாளும் புரிபவர் தவத்தினாலே உயர்ந்த தில்லையின் நடராச மூர்த்தியே.

பா நடை :

## 3. சக்தி சிவனின் அருளாட்சிச் சருக்கம் இந்தியாவில்

### 1. காசி

அருவுரு வாகிய மூர்த்திகளில் ஆங்கே
திருப்பெரு குகாசியில் விசுவநாதர் திகழும்
இருவினை பயன்தர இறப்போர் தமக்கு
அருளுடன் சிவகதி அளித்தவரை ஆள்வர். 22

### 2. திருக்காளத்தி

கண்ணப்பர்க் கருளிய காளத்தி நாதனோ
நண்ணிநின்று நாளுமே வழிபாடு செய்திடும்
புண்ணியரின் துயரினைப் போக்கியருள் செய்வதோ
டெண்ணரிய முத்தியாம் இன்பத்தை யளிப்பரே. 23

திண்ணனாய் வந்துமே சேரும் அன்பால்
கண்ணிடந் தப்பிய கண்ணப் பனுக்கு
நண்ணிநின் றுவந்திடு பதத்தை நல்கி
விண்ணவர் போற்றிடும் மேன்மை அளித்தார். 24

### 3. திருத்தில்லை

பொது

தில்லையில் இருந்து திருநடம் புரிந்திடும்
எல்லையில் அருளோன் எவருமே துதித்திட
வல்வினை நீக்கும் மாண்புடை நடேசனே
நல்நடந் தரிசிக்க முத்தியை நல்குவான். 25

துந்துபி முழங்கிடத் தும்புரு இசைத்திட
நந்தியே மத்தளம் நயப்புடன் கொட்டிட
நந்தனும் கையினை நாட்டமாய் அசைத்திடத்
திந்திமி திமியென ஆடுவர் நடனமே. 26

சடையினிற் கங்கையும் மதியுமே ஆட
இடையினில் உரகமும் மானுமே ஆட
நடைபயில் தேவியும் நயந்துமே காண
அடைந்தவர் மகிழ்ந்திட ஆடியே மகிழ்வார். 27

உரை நடை :

3. சக்தி சிவனின் அருளாட்சிச் சருக்கம் இந்தியாவில்

1. காசி

22. அருவுருவாகிய மூர்த்திகளில் ஆங்கே சிறந்து விளங்கும் காசி விசுவநாதப் பெருமான் இருவினைப் பலனாகக் காசியில் வசித்து இறந்தவர்களுக்கு முத்திப்பேற்றை அளித்தருளுவார்.

2. திருக்காளத்தி

23. கண்ணப்ப நாயனாருக்கு அருள் செய்த திருக்காளத்தி நாதனோ அங்கிருந்து தினமும் வழிபாடு செய்தருளுகின்ற அன்பர்களின் துன்பங்களைப் போக்கி முத்தியின்பத்தை அளித்தருளுவார்.

24. வேடுவத் திண்ணனாக வந்து மிகுந்த அன்பினாலே தனது கண்களையே பிடுங்கிச் சிவலிங்கப் பெருமானின் கண்களில் உற்ற ஊறு நீக்கிப் பேரானந்தம் உற்ற கண்ணப்பனை என்றுந் தன்னருகில் இருக்கச் செய்து தேவர்போற்ற அருள்செய்தவர் திருக்காளத்தி அப்பரே.

3. திருத்தில்லை

பொது

25. தில்லையம்பலத்தில் இருந்து பஞ்ச கிருத்திய நடனஞ் செய்கின்ற எல்லையில்லாத அருளை உடையவரும் துதிப்பவரது கொடிய வினைகளை நீக்கி அருளுகின்றவருமாகிய நடராசமூர்த்தியே தரிசிக்க முத்தியை அருளுபவராவார்.

26. துந்துபி ஓசை முழங்கவும் தும்புரு நாரதர் இசைபாடவும் திருநந்திதேவர் மத்தளம் அடிக்கவும் திருமால் தாளத்திற்கேற்பக் கையை அசைக்கவும் கனகசபையில் நின்று சபாநாயகர் திருநடனஞ் செய்தருளுவார்.

27. தில்லைநாதர் திருச்சடையிலுள்ள சந்திரனும் கங்காதேவியும் ஆடவும் அரையிற்கட்டிய பாம்பும் திருக் கையிலுள்ள மானும் ஆடவும் சிவகாமி அம்மையார் விருப்பத்தோடு தரிசிக்கவும் தம்மை அடைந்தவர்கள் துயரந்தீர்ந்து மகிழும்படியாகத் திருநடனஞ் செய்து மகிழ்வார்.

பா நடை :

நடமிடும் பேற்றோன் நானிலந் தழைத்திட
இடதுகா லினொடு இசைவுறு கரமதைத்
திடமுடன் உயர்த்தித் திந்திமி ஆடலால்
நடம்பயில் காளி நாணிடக் களிப்பார். 28

உடுக்கையே படைத்தலை உற்றதீ அழித்தலை
நடுக்கரம் காத்தலை நாடகம் அருளலை
நெடுநிலம் ஊன்றிய நீள்கழல் மறைத்தலை
நெடிதுமே துலக்கிட நிகழ்த்துவர் நடனமே. 29

அருட்செயல்கள் :

### 1. நந்தனுக் கருளியமை

சிதம்பர தரிசனம் தில்லையிற் பெற்றிடப்
பதமலர் பற்றிய பக்தனாம் நந்தனைப்
பதிதொறும் மறையவர் கனவினிற் பணித்துமே
இதமுடன் அழைத்தமை ஈசனின் அருளதே. 30

### 2. புத்தனை வாதில் வெல்ல அருளியமை

புத்தனாம் நந்தியும் புனிதமாம் மன்றினில்
அத்தினம் அமர்ந்துமே வாதினுக் கழைத்திடப்
பத்தருங் கலங்கிடப் பாவியை வென்றிடச் 31
சித்தருக் குரைத்தவர் சிற்பர மூர்த்தியே.

### 3. திருவாதவூரருடன் இரண்டறக் கலந்தமை

வாதவூரர் பாடிய வாசகத் தையெழுதி
ஆதரவாய் அம்பலம் வைத்துமே பொருளதாம்
போதகத்தை விளக்கிடச் சுட்டிய போதினிலே
பேதமில்லாத் தன்மையாய்ப் பிரீதியாய்க் கலந்தாரே. 32

உரை நடை :

28. உலகம் உய்யும்படியாகப் பஞ்ச கிருத்திய நடனம் ஆடுங் கூத்தப்பிரான் தமது இடது திருப்பாதத்துடன் அதற் கிசைந்த வலது கரத்தைத் தலைக்குமேலே உயர்த்தித் திந் திமியென ஆடித் தன்னுடன் நடனமாடிய காளி தனது காலை மேலே உயர்த்தமுடியாது நாணுவதைப் பார்த்து மகிழ்வார்.

29. உடுக்கையேந்திய திருக்கரம் படைத்தற் றொழிலை யும் அக்கினியேந்திய திருக்கரம் அழித்தற் றொழிலையும் நடுவிற் பொருந்திய அபயகரம் காத்தற் றொழிலையும் தூக்கிய நாடக பாதம் அருளலையும் முயலகன்மீது ஊன்றிய வலதுபாதம் மறைத்தற் றொழிலையும் விளக்கும்படியாகக் கூத்தப்பிரான் நடனம் ஆடுவார்.

அருட்செயல்கள் :

### 1. நந்தனுக் கருளியமை

30. சிதம்பர தரிசனம் பெறுவதற்காக மதிலோரம் நின்று பாதமலர் பற்றியே வருந்துகின்ற நந்தனாரைத் தில்லை வாழந்தணர்கள் வீடுதோறுங் கனவினிலே சென்று, தீவளர்த்துத் தீக்குளிக்கச் செய்து அழைத்துவருமாறு அருள் செய்ததை கூத்தப்பிரானின் அருளே.

### 2. புத்தனை வாதில் வெல்ல அருளியமை

31. புத்த பிக்குவானவன் கனகசபையில் அமர்ந்து தில்லை வாழ் அந்தணர்களை வாது செய்வதற்கு அழைத்தபோது அதனால் அந்தணர்கள் கலங்கப் பாவியாகிய புத்தபிக்குவை வாதில் வெல்லும்படி சித்தராகிய திருவாதவூரருக்குக் கனவிலே உரைத்தவர் சபாநாயகரே.

### 3. திருவாதவூரருடன் இரண்டறக் கலந்தமை

சபாநாயகர் திருவாதவூரடிகள் பாடிய திருவாசகம் திருக்கோவையாரைத் தமது திருக்கரத்தாலே எழுதி மிகுந்த பிரியத்தோடு கனகசபையின் படியின்மீது வைத்து, வாத வூரர் அதன் உண்மைப் பொருளை அந்தணர்களுக்கு விளக் கும்படியாகச் சுட்டிக் காட்டியபடியே கனகசபையுள்ளே வர அவருடன் இரண்டறக் கலந்து சாயுச்சிய பதத்தைக் கொடுத் தருளினார்.

யா நடை ;

4 பதஞ்சலியும் புலிப்பாதரும் வேண்ட நடனமாடியமை

பதஞ்சலி புலியும் பக்தியாய் வேண்டிட
இதமுடன் ஆடி இன்பமும் அளித்தவர்
நிதமுமே நியம அன்புடன் தொழுபவர்
பதமலர் சேரப் பரகதி அருள்வரே. 33

சிவகா மியம்மையுஞ் சிற்பரன் சார்வழி
தவறா தணைவதால் தகுவழி தேர்தரு
சிவநெறி யாளருஞ் சிந்தையில் ஓர்ந்துமே
அவநெ றிநீங்கச் செந்நெறி தெரிப்பரே. 34

## திருவாலவாய் — மதுரை

### பொது

காசியில் இறக்கவும் காளத்தி வழிபடவும்
ஆசிலாத் தில்லையில் அருட்தரிச னைபெறவுந்
தேசுடை முத்தியீ சிவபெருமான் ஆலவாயை
நேசமாய்க் கேட்டிட நிலைபெறுமுத் தியையீவர். 35

கடம்பமா மரத்தின்கீழ் காணடகு இலிங்கமாகி
இடமெலாம் சுயம்புமூர்த்தி என்றுமே இசைத்திடவும்
வடந்திகழ் மீனாட்சி மகிழ்வுடன் நோக்கிடவும்
நடம்புரி சொக்கன்தாள் நந்தலை சூடுவமே. 36

## அருட்செயல்கள்:

### 1. தடாதகைப்பிராட்டி திருமணம்

தாயாகும் மீனாட்சி தடாதகையாய் அவதரிக்க
ஓயாதே நடமாடும் உயர்கைலை நாதன்தான்
தோயாத மலமாகச் சுந்தரபாண் டியனாகி
தேயாத ருள்சுரக்கத் திருமணந்தான் நிகழ்த்தினனே. 37

உரை நடை :

4. பதஞ்சலியும் புலிப்பாதரும் வேண்ட நடனமாடியமை

33. பதஞ்சலி முனிவரும் புலிப்பாதரும் திருநடனத்தைத் தரிசிக்கவேண்டும் என்று பக்தியுடன் வேண்டிநிற்க அவர்களுக்கு இரங்கி விருப்பத்தோடு நடனமாடி இன்பமளித்தவராகிய கூத்தப்பிரான் தினமுமே மிகுந்த அன்புடன் வணங்குபவர்களுக்குப் பரமுத்தியை அருளிச் செய்வார்.

34. சிவகாமி அம்மையாருஞ் சபாநாயகர் சேர்வழி தவறாது தானும் அணைவதனால் பக்குவ நெறியை விரும்பிச் சேருகின்ற சிவனடியார்களும் நன்கு சிந்தித்துத் தவறான வழியினின்றும் நீங்கி உரிய சிவநெறியிற் செல்ல வழிப் படுத்துவார்.

## திருவாலவாய் — மதுரை பொது

35. காசியம்பதியில் இறப்பவர்களுக்கும் திருக்காளத்தித் தலத்தை வழிபட்டவர்களுக்கும் சிதம்பரத்தைத் தரிசித்தவர்களுக்கும் முத்தியைக் கொடுத்தருளுஞ் சிவபெருமான் திரு ஆலவாய் என்று பக்தியுடன் கேட்ட மாத்திரத்தே அவர்களுக்கு முத்தியைக் கொடுத்தருளுவார்.

36. கடம்பமரத்தின்கீழ் மிகுந்த அழகோடு விளங்குகின்ற சிவலிங்கமூர்த்தியாகிப் பூவுலகிலுள்ள யாவரும் தானாகவே தோன்றிய சுயம்புமூர்த்தியென்று புகழவும் முத்து வடம் பூண்ட மீனாட்சியம்மையார் மகிழ்வோடு தரிசிக்கவுந் திருநடம் புரிகின்ற சொக்கநாதப்பெருமானது பாதகமலங்களை நமது சிரசின்மீது சூடி மகிழ்வாம்.

அருட்செயல்கள் :

1. தடாதகைப்பிராட்டி திருமணம்

37. உலக மாதாவாகிய மீனாட்சியம்மையார் மலையத்துவச பாண்டியன் மகளாக அவதரித்து வளர உலகம் இயங்கும்படி ஓயாதே பஞ்சகிருத்திய நடனம் புரியும் கைலாசபதியானவர் மலமாசு அணையாத சுந்தரபாண்டியனாகிக் குறையாது உலகிற்கு அருள் சுரக்கும் படியாக அத்தடாதகைப் பிராட்டியாரைத் திருமணஞ் செய்தருளினார்.

பா நடை :

2. கல்யானைக்குக் கரும்பருத்தியதும்
பன்றிக்குட்டிகளுக்குப் பாலூட்டியமையும்

கண்கவருஞ் சித்தனாய்க் கல் யானைக்குக் கரும்பருத்தி
மன்னனாகும் அபிடேகன் மனத்துயரைத் தீர்த்தவனாம்
பன்றியது குட்டிகளின் பசிதீரப் பால்சுரந்த
நன்மதுரைச் சுந்தரனின் நற்பதத்தை நாடுவமே. 38

3. நரிகளைப் பரிகளாக்கியமை

நரியைப் பரியாக்கி நற்றவனை விடுவித்து
நரியே பரிதின்று நாடழிக்கச் சுந்தரனும்
அரிபோற் சிறுமன்னன் அன்பர்து யர்தீர்த்து
வரிசை தான்செய்ய வைகையை அனுப்பினனே. 39

4. மண்சுமந்து பிரம்படி ஏற்றமை

வந்தி அம்மையின் மாண்பதனை உணர்த்திடவே
விந்தை செய்கூலி வேடமுடன் மண்சுமந்து
எந்த உலகமுடன் எவ்வெவரும் தானாகும்
அந்த இயைபுணர்த்த அடியதனை ஏற்றானே. 40

5. விறகு வெட்டியாக வந்தமை

காண அரியனாகுங் கண்ணுதலான் சுந்தரேசன்
பாண பத்திரனின் பக்திதனுக் காளாகி
நாணி ஓடிடவே நல்லிசையான் ஏமநாதன்
வீணை தானிசைத்து விறகுவெட்டி ஆயினனே. 41

உரை நடை :

### 2. கல்யானைக்குக் கரும்பருத்தியதும் பன்றிக்குட்டிகளுக்குப் பாலூட்டியதும்

38. கண்டாரைக் கவருஞ் சித்த வடிவத்தை உடையவராகிக் கல்லுருவாகிய யானை, மன்னனது கையில் இருந்த கரும்பைப் பறித்துத்தின்ன வைத்தவரும் தாயில்லாது பசியினாற் துடித்த பன்றிக்குட்டிகளுக்குத் தாயாகிப் பால் சுரந்து ஊட்டியவருமாகிய நன்மதுரைச் சொக்கநாதரது பாதமலர்களை நாம் உய்யும் வண்ணம் நாடுவோமாக.

### 3. நரிகளைப் பரிகளாக்கியமை

39. சோமசுந்தரப் பெருமான் காட்டு நரிகளையெல்லாங் குதிரைகளாக்கி அரசனிடங் கொடுத்துத் திருவாதவூரரைச் சிறையின் நின்றும் விடுவித்து, அக்குதிரைகள் மீண்டும் நரிகளாகி ஏனைய குதிரைகளைத்தின்று நாட்டை அழித்தலும் சிங்கம்போற் சீறிய பாண்டிய மன்னன் வாதவூரரை வளைப் பிஞூடு வெயிலில் வைத்து வருத்திய கோபம் நீங்கி அவருக்கு வரிசை செய்யும் பொருட்டு வைகையைப் பெருக்கோடு அனுப்பி வைத்தார்.

### 4. மண் சுமந்து பிரம்படி ஏற்றமை

40. சோமசுந்தரப் பெருமான் பிட்டு வாணிச்சி அம்மையாரின் அன்பின் சிறப்பை யாவர்க்கும் உணர்த்தும் வகை அற்புதமான கூலி வடிவந்தாங்கி அவ்வம்மையின் கூலியாளாகிச் சென்று ஆற்றங்கரையை அடைக்க மண்ணைச் சுமந்து திருவிளையாடல் புரிந்து எவ்விடத்தும் வியாபகமாந் தன்மையை உணர்த்த அதிகாரிகளிடம் பிரம்படியை ஏற்றார்.

### 5. விறகு வெட்டியாக வந்தமை

41. பக்குவமில்லாத ஊனக் கண்ணுடையவர்களால் காண முடியாத நெற்றிக்கண்ணை உடைய சுந்தரேசப் பெருமான் பாணபத்திரனது பக்திக்கு ஆளாகி அவனது எதிரியான இசையில் வல்ல ஏமநாதன் நாணமுற்று இரவிரவாக ஓடும்படியாக வீணையிற் சாதாரி இசைத்து இனிமையாகப் பாடும் முதிர்ந்த விறகுவெட்டி வடிவத்தைக் கொண்டருளினான்.

பா நடை :

## 6. கரிக்குருவிக்கு உபதேசமும் நாரைக்கு முத்தியும் ஈந்தமை

வழிபட்ட கரிக்குருவி வலிமைபெற உபதேசம்
பரிவுடனே செய்தருளிப் பல்வரமுங் கொடுத்ததுடன்
நலிவின்றி வழிபட்ட நாரைக்கும் முத்தியுடன்
அழிவில்லா வரமளித்தோன் ஆலவாயிற் பெருமானே. 42

## 7. கால்மாறி ஆடிய கூத்தும் சிவலோகம் காட்டியமையும்

இரந்துமே வேண்டி நின்ற இராசசேக ரனைக்காக்கத்
திரமுடன் வலதுகாலைத் தூக்கிநின்றா டியபிரான்தான்
வரகுண பாண்டியமன் னன்வேண்ட வரமீந்து
பரனுறை சிவலோகப் பண்பதனைக் காட்டினனே. 43

## 8. தருமி பொற்கிழிபெற உதவியமை

பூசை செய்தருமி பொற்கிழியைப் பெற்றுய்யும்
ஆசை யுடன்தென்னன் அகவும்பா வேண்டிடவே
ஓசை நயமுடைய பாவீந்து ஊறுரைத்த
மாசை யடக்கியருள் மாண்பினைத்தான் போற்றுவமே. 44

உரை நடை :

### 6. கரிக்குருவிக்கு உபதேசமும், நாரைக்கு முத்தியும் ஈந்தமை

42. கரிக்குருவி ஒன்று, தான் இருந்த மரத்தின்கீழ் சிவபக்தர்ஒருவர் மற்றவர்களுக்குக் கூறிய கூற்றைக் கேட்டுப் பூர்வ ஞானந் தோன்றப் பொற்றாமரை வாவியில் மூழ்கி ஆலவாயை வலம்வந்து வணங்கி, இம்முறையே மூன்று நாட்கள் செய்துவர, மிருத்தியு மந்திரத்தை உபதேசித்து வேண்டிய வரங்களைக் கொடுத்ததோடு நாரை ஒன்று, தான் இருந்த மரத்தின் கீழ் இருந்த முனிவர்கள் படித்ததைக் கேட்டுப் பூர்வ புண்ணியங் கைகூடப் பொற்றாமரை வாவியிலே நீராடி வலம் வந்து தியானஞ் செய்து கொண்டிருக்க, அது விரும்பிய வடிவத்தில் தோன்றி முத்தியும் வேண்டிய வரங்களும் அளித்தவன் ஆலவாய்ப் பெருமானே.

### 7. கால்மாறி ஆடிய கூத்தும், சிவலோகம் காட்டியமையும்

43. "நெடிதுமே வலதுகாலை ஊன்றி ஆடிய தேவரீரது வருத்தந் தீரும்படியாகக் காலை மாறி இடதுகாலைஊன்றி ஆடியருளவேண்டும், இல்லையேல் என்னுயிரை மாய்ப்பேன்" என்று உடைவாளின்மேல் வீழ்ந்து மாய எத்தனித்த இராசசேகரபாண்டியனைக் காக்கும்படி வெள்ளியம்பலத்தில் இடதுகாலை ஊன்றி ஆடிய பிரானே! வரகுணபாண்டியன் சிவலோகக் காட்சியைக் காணவிரும்பிப் பூசித்து இரந்து நிற்க, அவனுக்குச் சிவலோகக் காட்சிகளைக் காட்டியருளினான்.

### 8. தருமி பொற்கிழி பெற்ற உதவியமை

44. பூசை செய்துவரும் ஆதிசைவனாகிய தருமி என்பான், வமிச சூடாமணிப் பாண்டியனது மனக்குறிப்பை வெளிப்படுத்தும் பாவொன்று தரும்படி பிரார்த்திக்கச், சுந்தரேசுவரப் பெருமானும் விரும்பியவாறே பாவீந்து, அதற்குக் குற்றங் கற்பித்த நக்கீரனை வாதில் அடக்கி அவன் மன்னிப்புக் கேட்க அருள்செய்த மாண்பைப் போற்றுவோமாக.

பா நடை :

### 9. தாயாகிப் பணிவிடை செய்தமை

தன்பணியில் ஈடுபட்ட தாயினது வேண்டுதலால்
மன்னு மந்தத் தாயாகி மகளினது வேதனைதீர்
ஒன்றும்ப ணிபுரிந்து உற்றதுணை தான் செய்த
இன்னருளுக் கொப்புவமை உண்டோதா யுமானவரே. 45

### 10. மாதுலனாகி வந்து வழக்குரைத்தமை

மாதுலன் ஈந்தசெல்வம் மாண்பிலாளு தியர்கவர
ஏதுமே அற்றாராய் இரங்கிடும் நிலைக்கிரங்கி
மாதுல னாகிவந்து மாதுயரை நீக்கிவைத்த
ஆதுலர்க் கன்னையாவான் ஆலவாய்ப்பெ ருமான்தானே. 46

### 11. வன்னியும் கிணறும் இலிங்கமும் சாட்சிகளாக அழைத்தமை

கற்பினைக் காக்கவேண்டிக் கதறியமா துக்கிரங்கி
அற்புத வன்னிசேர அணைந்திட்ட கிணறுதானும்
பொற்புடை இலிங்கமுடன் புதுமையாக அழைத்தவனின்
நற்பதம் நாமுமேத்த நந்துயர கலுந்தானே. 47

உரை நடை :

### 9. தாயாகிப் பணிவிடை செய்தமை

45. கோவிலிற் பணிகள் செய்துவரும் ஓர் தாயானவள் ஓர் நாள் தன்மகளின் பிரசவ வேதனை அண்மித்ததைக் கண்டு, தான் மீண்டு வரும்வரை காப்பாற்றுமாறு வேண் டிக் கொண்டு சென்றதும், மகள் பிரசவ வேதனையால் வருந்தப் பக்தையாகிய அத் தாயின் உருவத்தோடு சென்று மகளின் பிரசவத்திற்குரிய பணிகளைச் செய்த அருட்செய லுக்கு ஒப்புண்டோ தாயுமானவரே!

### 10. மாதுலனாகி வந்து வழக்குரைத்தமை

46. மாமனார் கொடுத்த செல்வம் எல்லாவற்றையும் மாண்பில்லாத உறவினர் அபகரித்ததால் ஏழைகளாகிய மக னுந் தாயுந் திருவாலவாயை அடைந்து தமது நிலையைக் கூறிக் காப்பாற்றும்படி இரந்து வேண்டி நிற்கும்போது, அவர்கள் மேலிரக்கங்கொண்டு மாமனாகவே உருவந்தாங்கி வந்து வழக்கிற் சாட்சி கூறி அவர்களின் சொத்துக்களை மீட்டுக்கொடுத்தவர் ஆதுலர்க்குத் தாயாகிக் காத்தருளும் திருவாலவாய்ப் பெருமானே.

### 11. வன்னியுங் கிணறும் இலிங்கமும் சாட்சிகளாக அழைத்தமை

47. மதுரையிலுள்ள ஓர்வணிகனின் மூத்த மனைவி இளைய மனைவியைப் பார்த்து "காமக் கிழத்தியாகிய உனக்கு அவ்வளவு துணிவா? உனது விவாகத்திற்குச் சாட்சிகள் உண்டானரல் அழை பார்ப்போம்," என்று ஏச, அது பெறாத கற்பின் மிக்கவளாகிய இளையவள் சந்நிதியை அடைந்து, "திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் விவாகத் தின்போது சாட்சிகளாக வைத்த வன்னியுங் கிணறும் இலிங் கமும் இங்கு அழைத்து எனது கற்பைக் காக்க வேண்டும். இன்றேல் இங்கேயே உயிரை விடுவேன்," என்று முறை யிட்டு இரந்து நிற்க அம்மாதிற்கு இரங்கி அவற்றை அழைத்துக் கொடுத்த சுந்தரேசப் பெருமானின் பாதகமலங் களை நாமுந் துதித்து வணங்க நம் துயரும் அகலுந்தானே.

பா நடை ;

## 5. இராமேசுவரம்

இராம பிரான்பூசை இயற்றியத லமாதலினால்
இராமே சுவரமென்றே இயல்பாக அழைத்திடுவர்
இராம நாதனங்கே இருந்திடுதீர்த் தங்களினால்
வராம லேபிணிகள் மாற்றியருள் வண்மையனே. 48

பிதிரர் கடன்தீர்க்கப் பெரும்தோசத் துயர் நீக்கப்
பதியின் நலன்நாடும் பக்தர்து யரந் தீர்ப்போன்
அதிதீர ராமனவன் அன்பாகப் பூசைசெய்ய
விதிபோற் தொடர்ந்துவந்த பிரமகத்தி நீக்கினனே. 49

## 6. திருத்தோணிபுரம் (சீர்காழி)

அம்மையப்பர் என்றழவும் ஆகாயக் காட்சியீந்து
மும்மையும் பயனுணர்த்தும் முழுஞானப் பாலூட்டி
எம்மையும் வாழவைக்கும் எழில்ஞானம் பாடவைத்த
செம்பவளத் திருமேனித் தோணியப்பர் தாள்பணிவாம். 50

## 7. திரு அருணாசலம் (திருவண்ணாமலை)

விண்ணார்முடி அயன்தேட விளம்புமடி அரிதேட
எண்ணாவகை ஒளிப்பிழம்பாய்ச்செருக்கறுத்தே அருள்செய்து
உண்ணாமுலை உமையாளொா டும்உடனாய் நின்றருளும்
அண்ணாமலைப் பதியான்தன் அடிக்கமலஞ் சூடுவமே. 51

உரை நடை :

## 5. இராமேசுவரம்

48. இராமபிரான் தனது பிரமகத்தி தோசம் நீங்கப் பூசை செய்து வணங்கிய தலமாதலினால் இராமேசுவரம் என்றே எல்லோரும் அதனை அழைப்பார்கள். அங்கே அம்மையாரோடு வீற்றிருக்கின்ற இராம நாத சுவாமி அவ்விடமமைந்த 32 தீர்த்தங்களினால் நீராடி வழிபடுபவர்களின், பிணிகள் திரும்பி வராமலே மாற்றி அருளுகின்ற சிறப்பினை உடையவராவார்.

49. பிதிரர் கடன்களைத் தீர்ப்பதற்கும் தீராத கொடிய பிரமகத்தி முதலிய தோசங்களை நீக்குவதற்கும் ஆக இத்திருத்தலத்தின் சிறப்பைநாடி வருகின்ற பக்தர்களது துயரத்தைத் தீர்ப்பவராகிய இராமநாத சுவாமி வீரனாகிய இராமபிரான் அன்பாகப் பூசை செய்ய அவனைத் தொடர்ந்து வந்த பிரமகத்தி தோசத்தை நீக்கியருளினார்.

## 6. திருத்தோணிபுரம் ( சீர்காழி )

50. சிவ பாத விருதயர் பிள்ளையைக் குளக்கரையில் இருத்திவிட்டு நீரில் இறங்கி முழுகியபோது தந்தையைக் காணாத பிள்ளை ' அம்மே அப்பா ' என்று அழ, அம்மை அப்பராக இடப வாகனத்தில் ஆகாயத்தில் காட்சியீந்து அம்மையார் மூலம் மும்மையும் உணர்த்தும் ஞானப்பாலை ஊட்டி எம்மனோரையும் வாழவைக்கும் ஞானப் பாடல்களைப் பாடவைத்த பவளமால்வரை போன்ற தோணியப்பரது பாதங்களை வணங்கி யுய்வாம்.

## 7. திரு அருணாசலம் (திருவண்ணாமலை)

51. அன்னப்புள் வடிவாகிய பிரமன் முடியைத் தேடவும் பன்றி வடிவாகிய விஷ்ணு அடியைத் தேடவுஞ் செய்து, அடி முடி காணாதவாறு அக்கினிப் பிழம்பாய்த் தோன்றி அவர்களின் செருக்கை யடக்கி இலிங்கோற்பவராகத் தோன்றி அவர்களுக்கு அருள் செய்து உண்ணாமுலை உமையம்மையாரோடு வீற்றிருக்கின்ற அண்ணா மலேசுவரரின் பாத கமலங்களைத் தலைமேற் சூடிச் செருக்கறுந்து அருள் பெறுவோமாக.

பா நடை :

## 8. திருப்பெருந்துறை

மருவிய வாதவூரன் மனங்கொள்ளும் வகையினிலே
அருளுரை வழங்கியதால் அருட்கோலம் பூணவைத்த
பெருந்துறை வீற்றிருக்கும் பேரருளின் குன்றமன்னான்
திருவடி சென்னிசேர்க்கத் தீவினைகள் விலகிடுமே. 52

## 9. திருவாரூர்

அன்பனுக் கன்பனாகும் அருட்பண்பைத் துலங்கவைக்க
நண்பனாஞ் சுந்தரற்கு நயப்புடனே தூதாகிப்
பண்புடைய பரவையூடல் படியச்செய் அருமையினால்
மண்ணவரை மகிழ்வூட்டுந் திருவாரூர்ப் பெருமானே. 53

இடக்கண் பெற்றதாலே இசைவுடனே நடந்துவந்து
சுடரும் ஆரூரர் திருமுன்பு நின்றிரங்கிப்
படருந் துயர்கூறிப் பார்வைதனைக் கேட்டிடவே
இடரில் பார்வைதந்த இறையருளைப் போற்றுவமே. 54

## 10. திருக்கச்சியேகம்பம்

சத்தியம் தவறிடவே கண்ணிரண்டுங் குருடாகக்
கச்சியிற் கண்வேண்டிக் கசிந்துருகி நிற்கையிலே
அத்தனும் அன்பனுக்காய் அகங்குழைந்து இடக்கண்ணை
மெத்தன வேகொடுத்த மெய்க்கருணை தேரீரே. 55

உரை நடை :

## 8. திருப்பெருந்துறை

52. குதிரைகள் வாங்கும்படியாகத் திருப்பெருந்துறையை அடைந்த திருவாதவூரர், வேத ஒலி கேட்டுக் குருந்தமர நீழலைச் சார்ந்து, மனத்தால் வணங்கி வினாவிய வினாக்களுக்கு, அவர்மனம் ஏற்கும்படியாக அருளுரை வழங்கித் திருவாதவூரரை அடியார் கோலம் பூணச் செய்த திருப்பெருந்துறையில் வீற்றிருக்கின்ற அருள்மலை போன்ற எம்பிரானது திருவடிகளை எம் தலைமேற் சூடத் தீவினைகள் அகன்று விடும்.

## 9. திருவாரூர்

53 அடியார்களுக்கு அடியானாய் விளங்குகின்ற அருட்பண்பை விளக்கும் முகமாக அன்பராய சுந்தரமூர்த்தி நாயனாருக்கு விருப்பமுடன் தூதாகிச் சென்று பரவையூடலை நீக்கிய அருமையினாலே பூமியில் உள்ளாரை மகிழ்விக்கும் திருவாரூரில் வீற்றிருக்கும் பெருமானே காத்தருள்க.

54. கச்சி ஏகாம்பர நாதர் அருளினாலே இடக்கண்ணைப் பெற்றுநடந்துவந்து அருள் பிரகாசிக்கின்ற வான்மீக நாதர் முன்புநின்று, தனது துன்பத்தைக்கூறி வலக்கண் பார்வையையும் தரும்படி வேண்டிடவே. வலக்கண் பார்வையையுங் கொடுத்தருளிய திருவருளைத் துதித்து, எமது இடரையும் நீக்குவாம்.

## 10. திருக்கச்சியேகம்பம்

55. சுந்தரமூர்த்தி நாயனார் சங்கிலியாருக்கு, "உன்னை விட்டுப் பிரியேன்," என்று செய்த சத்தியவாக்குத் தவறித் திருவாரூர் நோக்கி நடக்கவே, இரு கண்களும் குருடாக மெல்ல மெல்ல நடந்துவந்து கச்சியேகம்பத்திற் பார்வையைத் தரும்படி வேண்டி நிற்கையில், எம்பெருமான் அன்பர்மேல் இரங்கிப் பிழை பொறுத்து, இடக்கண் பார்வையைக் கொடுத்தருளிய மெய்க் கருணையைத் தெளியுங்கள்.

பா நடை :

கம்பை நதிக்கரையில் காமாட்சி பூசைசெய்யப்
பொங்கு புனலெழும்பிப் பூசைலிங்கங் கரைத்திடவே
அம்பிகை தானும் அவ்விலிங்கம் அணைத்திடலும்
செம்மார் பில்தழும்பு திருக்கச்சி நாதனுக்கே. 56

## 11. திருவிரட்டானம் ( திருவதிகை வீரட்டானம் )

சூலைநோயது பீறிடவே துயருழந்த தருமசேனன்
மாலைகழியத் தமக்கையிடம் வந்திடவே திலகவதி
வேளையதை நன்குணர்ந்து வீரட்டா னஞ்சேர்க்கக்
காலையிலே பாடவைத்துக் கடும்நோயைத் 'தீர்த்தவரே. 57

## 12. திருவையாறு

அருமையாந் தாண்டகங்கள் ஐயன்மேற் பாடுமன்பர்
தெருவீதிக் குளத்தினிலே தெரிவித்த படி மூழ்கித்
திருவையாற்றில் கைலைக்காட்சி மகிழ்வுடனே தரிசித்தார்
அருளாளர்க் கருள்செய்யும் அருட்பேற்றை இயம்பரிதே. 58

## 13. திருமறைக்காடு (வேதாரணியம்)

மறைஞானத் திருநாவான் வணங்கியே பாடிடவும்
இறைஞான சம்பந்தன் இசைவுடன் ஓதிடவும்
கறைபடிந்த கதவுகள்தான் திறந்துமே மூடினவே
மறைக்காட்டு மணாளன்தன் அருளுகை தான்வியப்பே. 59

உரை நடை :

56 கம்பை நதிக்கரையில் காமாட்சி அம்மையார் சிவ லிங்கம் அமைத்துப் பூசை செய்யும்போது, நீர் பொங்கிப் பெருக்கெடுத்து. அவ் விலிங்கத்தைக் கரைத்தலும், உடனே அம்மையார் அவ் விலிங்கப் பெருமானை மார்போடு அணைத்தலும். கச்சி ஏகம்பநாதரது சிவந்த மார்பிலே காமாட்சி யம்மையாருடைய முலைகளின் தழும்பு பதியலா யிற்று.

## 11. திருவீரட்டானம் (திருவதிகை வீரட்டானம்)

57. பாடலிபுரத்தில் சமணர் பள்ளியிலே சூலைநோயைச் சமணர்களினாலே தீர்க்க முடியாது போகவே வருந்திய தருமசேனன், இரவிரவாகத் தமக்கையாராகிய திலகவதி யாரிடம் வந்திடலும், திலகவதியார் எம்பெருமான் முன்னே தெரிவித்த வார்த்தைகளை உணர்ந்து திருவீராட்டானேசு வரத்திற்குக் கூட்டிச்சென்று விபூதி கொடுக்கத், தரும சேனன் வாங்கி அணிதலும், தேவாரம் பாடவைத்து நாவுக் கரசனெனப் பெயர் துலங்க அருள் செய்து சூலைநோயைத் தீர்த்து வைத்தவரே அபயம்.

## 12. திருவையாறு

58. அருமையாகிய திருத்தாண்டகப் பாடல்களை எம் பெருமான் மேற்பாடுகின்ற அப்பர் சுவாமிகள். அசரீரி வாக் கிற் தெரிவித்தபடி வழியிற் காட்டிய குளத்தில் மூழ்கித் திருவையாற்றில் மிதந்து. ஆலய வாசலிற் சென்று திருக் கைலாயக் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தார். எம்பெருமான் அடியார்க்கு அருளும் பேற்றை வியந்து சொல்லுதல் அரிய தாகும்.

## 13. திருமறைக்காடு ( வேதாரணியம் )

59. வேதஞான சாரத்தைப் பாடுகின்ற திருநாவுக்கரசர் வணங்கிப்பாடவும், திருஞானசம்பந்தர் வணங்கி ஓதவும், வேதங்களினாலே திருக்காப்புச் செய்த காலந் தொடங்கித் திறந்து மூடாமற் கறைபடிந்த கதவுகள் தாமாகவே திறந்து மூடின. வேதாரணியேசர் அன்பர்களது வேண்டுகோளுக்கு அருள்செய்யுமாறு வியக்கத்தக்கதே.

பா நடை :

## 4. சக்தி சிவனின் அருளாட்சிச் சருக்கம் - ஈழத்தில்

ஈழத்து ஆட்சிதனை இயல்பாக நோக்குகையில்
காளகண்டன் வீற்றிருந்து கருணைசெய் தலங்களிலே
கோலமுடைக் கோணேசு வரம்கிழக்கில் ஒளிசெய்ய
ஓலமிடும் வடகரையில் நகுலேசு வரந்துலங்க. 60

மேல்கரையிற் சிலாபத்தில் முனீஸ்வரமும் மாந்தையில்
பால் ஆற்றங் கரையினிலே பலர்புகழ்கே தீஸ்வரமும்
சால்புடைய ஈசுவரங் களாகவுமே சாற்றிடுவர்
மால்விளங்கும் இவற்றோடு மன்னுதலம் பலவுளவாம். 61

### 1. திருக்கோணேசுவரம்

#### நகர்வலம்

தென்கைலை என்றிசைக்குந் திருக்கோணே சுவரத்தில்
இன்னருள்கூர் மாதுமையாள் எழிற்கோலந் துலங்கிவரப்
பன்னுதமிழ் மறைபாடும் பாசுரங்கள் இசைத்துவர
இன்புற்றே உலாவிவரும் கோணேசர் எழிலென்னே. 62

திருவாதிரை மாசிமகம் சிவநிசிஆ னிஉத்தரமாம்
பெருவிழாக்களு டன்கவரும் பீடுடைய திருவுலாவும்
வருதினங்களில் வருகைதரும் பத்தர்கள் வலம்வந்து
தரிசிக்கவே துயர்தீர்ப்போன் தண்ணருட்கோ ணேஸ்வரனே. 63

### 2. நகுலேசுவரம்

தீர்த்தமாடி வழிபட்டுச் சேவைசெய்த நகுலமுனி
சார்தருகீ ரிமுகந்தான் நன்முகமாய் அருள்செய்த
சேர்தருபி திர்க்கடன்கள் தீர்ப்போர்க்கு அருள்புரிவோன்
பேர்அருளாள் நகுலாம்பி கைசேர்நகு லேஸ்வரனே. 64

உரை நடை :

## 4. சக்தி சிவனின் அருளாட்சிச்சருக்கம் - ஈழத்தில்

60. ஈழநாட்டிலே சக்திசிவனின் அருளாட்சிகளை இயல்பாக நோக்கும் போது, நஞ்சுண்டு அருள் செய்த எம்பெருமான் வீற்றிருந்து அருள்பாலிக்குந் தலங்களிலே, அருட்கோலம் விளங்குகின்ற திருக்கோணேசுவரம் கிழக்குப் பக்கத்திற் பிரகாசிக்க அலைகள் மோதுகின்ற வடகரையில் நகுலேசுவரம் விளங்க,

61. மேற்குக் கரையில் சிலாபத்தில் முன்னேசுவரமும், மாந்தையில் பாலாவித்தீர்த்தக் கரையில் திருக்கேதீஸ்வரமும் ஆகிய இவற்றை ஈழத்திற் சிறந்த ஈசுவரங்களாகச் சைவப் பெருமக்கள் கூறுவர். பெருமை விளங்குகின்ற இவற்றுடனே இன்னுஞ் சிறந்த பல தலங்களும் உள்ளன.

### 1. திருக்கோணேசுவரம் நகர்வலம்

62. தட்சண கைலாயம் என்று சிறப்பித்துக் கூறப்படுகின்ற திருக்கோணேசுவரத்தில், அன்பர்க்கு அருள் பாலிக்கும் மாதுமை அம்பாளின் திருக்கோலம் அருகில் மிளிரும் படியாகத், திருமுறைப் பாசுரங்கள் அடியாரால் இசையோடு ஓதப்பட்டுவர, நகர மக்களுக்கு அருள் பாலிக்கத் திரு உலாவில் வரும் கோணநாதேசுவரரின் திருக்கோலம், இத்தகைத்து என்று வியந்து கூற முடியாததாகும்.'

63. திருவாதிரை, மாசிமகம், சிவராத்திரி, ஆனிஉத்தரம் ஆகிய தினங்களில் நடைபெறும் விழாக்களுடன், பெருமை விளங்க நகர்வலம் வருகின்ற திருவுலாவிலும், வருகின்ற பக்தர்கள் வலம் வந்து தரிசிக்க, அவர்களின் துயரத்தைத் தீர்ப்பவன் திருக்கோணேசுவரப் பெருமானே.

### 2. நகுலேசுவரம்

64. கீரிமலைத் தீர்த்தத்தில் தீர்த்தமாடி வழிபட்டுச் சேவை செய்த நகுல முனிவரின் கீரிமுகத்தை, நன்முகமாக அருள் செய்து, பிதிரர் கடன் தீர்க்க வருகின்றவர்களும் வழிபட அருள் செய்பவர். மிகுந்த அருளையுடைய நகுலாம்பிகை சமேத நகுலேசுவரப் பெருமானே.

பா நடை :

சிவநிசித் தீர்த்த மீறாய் நிகழ்கின்ற திருவிழாக்கள்
நவந்தரு தத்துவங்கள் நன்றாக உணர்த்தியிடத்
தவப்பயன் கேட்போர்க்குத் தரும்புராண படனமுமே
நலந்தரத் துலக்குகின்ற நகுலகிரிப் பெருமானே. 65

## 3. முன்னேசுவரம்

வடிவாம்பிகை சமேத முன்னேசு வரப்பெருமான்
வடிவமைந்த திருவுருக்கள் மாண்புடனே மிளிர்கின்ற
கடிகமழும் முனீசுவரக் காலைமாலை விழாக்களிலே
அடியார்க்குச் சோமாஸ்கந் தமூர்த்தியாக வந்தருள்வார். 66

சிவனடியார் திருவிழாவில் மாலைநேர உலாவதனில்
அவனிபுகழ் நாயன்மார் அறுபத்து மூவருமே
பவனிவரும் பிரான்தன்னைப் பார்த்தபடி வருங்காட்சி
எவரையுமே ஈர்த்திழுக்கும் எம்பிரானின் அருட்பேறே. 67

தீமிதிப்பு வைபவத்திற் சிவனடியார் தீயிறங்கல்
ஆமிதனைப் பார்த்தவரும் அதிலிறங்கி நடந்தனரே
சாமியருள் இதுவென்றே சகலருமே போற்றிநின்றார்
நேமிதரித் தான்தங்கை யுடன்முனீசர் அருளிதுவே. 68

## 4. திருக்கேதீசுவரம்

கேதென்பான் வழிபடவே வேண்டியதைக் கொடுத்தபிரான்
சாதுக்கள் வணங்கிடவும் சம்பந்தன் பாடிடவும்
வாதுபுரி சுந்தரன்தான் வண்டமிழை ஓதிடவும்
ஆதுலர்கள் மகிழ்ந்திடவும் அருள்வாரி சொரிவாரே. 69

உரை நடை :

65. சிவராத்திரி தினத்தைத் தீர்த்தத் தினமாகக்கொண்டு நடக்கின்ற 15 திருவிழாக்களும், ஒவ்வோர் விழாவும் ஒவ்வோர் வகையான சிறந்த தத்துவத்தை உணர்த்தவும், கேட்போர்க்குத் தவப்பயனைத் தருகின்ற புராணபடனமும் நன்மை தரும் வகையில் நிகழச் செய்கின்ற, நகுலாம்பிகை சமேத நகுலகிரிப் பெருமானைப் போற்றுவமே.

## 3. முன்னேசுவரம்

66. வடிவாம்பிகை சமேத முன்னேசுவரப் பெருமான் உருவ அமைப்புச் சிறப்பாக அமைந்துள்ள திருவுருக்கள் விளங்குகின்றதும். வாசனை பரிமளிக்கின்றதுமாகிய முன்னேசுவரத்தின், காலை மாலைத் திருவிழாக்களில் அடியார்கள் தரிசித்து மகிழும்படியாகச் சோமாஸ்கந்த மூர்த்தியாக வருகின்றார்.

67. சிறப்பாகச் சிவனடியார்களுக்குரிய திருவிழாவின் போது மாலை நேரத்திருவிழாவில் 63 நாயன்மார்களும் வீதி சுற்றிப் பவனி வரும் எம்பெருமானைப் பார்த்தபடி வருகின்ற காட்சி, காண்போர் யாவரையுமே ஈர்த்துப் பரவசப் படுத்து மெனில், அது முன்னேசுவரப் பெருமானின் அருட் பேறேயாகும்.

68. தீவளர்த்துச் சிவனடியார்கள் அதில் இறங்கி நடப்பதனைப் பார்த்துக் கொண்டு நின்றவர்களும், பக்தி வசப்பட்டு உசுப்புக் கலையோடு தீயில் இறங்கி, நடப்பதனைச் சூழ நின்ற எல்லோரும் வியந்து இது முன்னேசுவரப் பெருமான் பெருமாட்டியின் திருவருளின் பேறே என்று போற்றுகிறார்கள்.

இது திருமாலின் தங்கையாகும் வடிவாம்பிகை சமேத முன்னேசுவரப் பெருமானின் கருணைக்கு எடுத்துக் காட்டாகும்.

## 4. திருக்கேதீசுவரம்

69. கேது என்ற கிரகம் வழிபாடு செய்ய, வேண்டிய வரங்களை அருள் செய்தவராகிய திருக்கேதீஸ்வரநாதன் சாதுக்களாகிய தபசிகள் வணங்கவும், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தேவாரம் பாடவும், வாதாடி வழக்குரைத்த சுந்தரமூர்த்தி நாயனார் பண்ணோடு தேவாரம் ஓதவும், ஆதுலர்கள் மகிழும் படியாகவும், அருள்மாரி பொழிகின்றவராவார்.

பா நடை :

அழிவுசெய் போர்த்துக்கீசர் அழிந்தவகை தேரீரோ
இழிவுசெய் தூர்த்தர்செய்யும் இன்னல்கள் விரைவினிலே
ஒழியும்நாள் வருதல்காண்பீர் உய்யுஞ்சீர் தோன்றிடச்செய்
ஒளிரும்நாள் தந்தருள்வாரே உரியவாறு போற்றிடவே. 70

## 5. ஒட்டுசுட்டான் தான்தோன்றீசுவரம்

ஒட்டுசுட்டான் திருத்தலத்தில் உளிசெதுக்கா இலிங்கமாகி
இட்டமுடன் தொழுவார்க்கு அருள்செய்தான் தோன்றீசர்
ஒட்டியனை பூலோக நாயகிதான் மருங்கமர்
அட்டமூர்த்தி யாகியாங்கே அருள்வாரி சொரிகின்றார். 71

தீராத நோய் தீர்க்கத் திகழ்வேட்டை விழாவினிலே
சீராக உடையணிந்து சிறப்புமிகும் வேடராகிச்
சோராதே நடித்திடலுஞ் சோர்வுதரும் நோய் நீக்கிப்
பாராரும் பரவவைப்பார் தான்தோன்றி ஈசுவரர். 72

## 6. கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீசுவரம்

கொக்கட்டிச் சோலையிலே குடியிருக்கும் வேடுவர்கள்
திக்கொன்றில் மரவடியிற் சிவலிங்கம் காணவைத்தார்
பக்தியோடு பந்தலிட்டுப் பரவசமாய்த் தொழவைத்தார்
திக்கெல்லாம் பரவிநிற்குந் தான்தோன்றி ஈசனாரே. 73

உரை நடை !

70. திருக்கேதீசுவரத்தை அழித்த போர்த்துக்கீசர் அழிக்கப்பட்டு ஈழத்தைவிட்டுத் தொலைந்த வகை அறியீரோ? இப்பொழுது இழிவு செய்கின்ற தூர்த்தர்கள் செய்கின்ற துன்பங்கள் நீங்கும் நாள் விரைவினிலே வருவதைக் காண்பீர்கள். நாம் பக்தியுடன் வணங்கக், கேதீசுவரநாதன் நன்கு வாழ்வதற் கேற்ற ஒளிபொருந்திய காலத்தை விரைவிலே தந்தருளுவார்.

## 5. ஒட்டு சுட்டான் தான்தோன்றீசுவரம்

71. ஒட்டு சுட்டான் திருத்தலத்தில், உளியினாற் செதுக்காத சுயம்பு இலிங்கமாகி, விருப்பத்தோடு தொழும் அடியார்களின் துயரை நீக்கித் திருவருளைப் பொழிகின்ற அட்ட மூர்த்தியாகிய தான்தோன்றீசுவரர், பூலோக நாயகி அம்மையார் மருங்கில் வீற்றிருக்க அருள் மழையைச் சொரிகின்றார்.

72. தீராத நோயினால் வருந்துபவர்கள், நோய் தீர்க்கும்படி நேர்கடன் வைத்து, வேட்டைத் திருவிழாவின் போது, சீராக வேடுவ வடிவம் பூண்டு சிறப்பாகத் தந் திருமுன்பு நடித்திடவும், அவர்களின் சோர்வுதரும் நோயினை நீக்கி, எவரும் போற்றும் படியாக அருள்பவர் ஒட்டுசுட்டான் தான்தோன்றீசுவரராவர்.

## 6. கொக்கட்டிச் சோலைத் தான் தோன்றீசுவரம்

73. மட்டக்களப்புப் பகுதியிற் கொக்கட்டிச்சோலையிலே வாழ்ந்து வந்த வேடர்கள், காட்டிற் தேன் எடுக்கும் வேளையிலே, ஓர் கொக்கட்டி மரத்தின் கீழ் சிவலிங்கத்தைக் காணும்படி செய்தார். அவ் வேடர்கள் பக்தியோடு பந்தல் இட்டுப் பரவசமாக வணங்கும்படி செய்தார். யாரெனில், அட்டதிக்குகளில் உள்ளார் யாவராலும் தொழப்படுகின்ற கொக்கட்டிச் சோலைத் தான்தோன்றீசுவரரே.

பா நடை :

மட்டக் களப்பினிலே மகிழ்வுடன்தேர் ஓட்டமென
இட்ட மாயமழைக்க ஈசனாருந் தேரேறி
அட்ட திக்குக்களும் ஆரவாரம் மிகுந்தொலிக்கச்
சிட்ட ருக்கருளித் திருக்கோவில் வலம்வருவார். 74

தீர்த்தவிழாக் காலையிலே திகழ்சூக ரவேட்டைதான்
பார்ப்போரைப் பார்த்திபன் தவத்திற்கே கொண்டுசென்று
ஈர்த்திழுக்கும் விழாவதனில் ஈசனது கருணைதான்
யார்மனமும் உருகிடவே யாவரையும் மகிழவைக்கும். 75

## 7. வண்ணை வைத்தீசுவரம்

வண்ணை நகரினிலே வைத்தீசர் ஆலயத்தில்
நண்ணும் விழாக்களிலே நால்வர்க்கீ யுங்காட்சி
மன்னும் அன்பர்கள் மனங்கவரும் அற்புதமாம்
என்றும் வைத்தீசர் இத்தலத்திற் றிகழ்வாரே. 76

எம்பெருமான் வைத்தீசர் எமக்களிக்கும் விழாக்களிலே
செம்மனச்செல் வியன்பினிலே திளைத்தவளின் பிட்டையேற்று
மண்சுமந்த பெருவிழாப்போல் மாண்புடைத்தாம் பிட்டதுவும்
அம்மாண்பு அப்பெருமான் அருள்செய்யுந் திருக்கூத்தே. 77

பவவினையுறும் பக்தர்கள் பதம்பணிந்து வேண்டிநிற்க
நவராத்திரிக் கொலுவினிலே நந்தையல் நாயகித்தாய்
கவரும்வகை வீற்றிருந்து கற்பகம்போல் ஈந்தருளி
நவநாட்களின் பூசையேற்று நலம்பலவுந் தந்தருள்வாள். 78

உரை நடை :

74. மட்டக்களப்புப் பகுதியிலே, தேர் ஓடும் கோவில் இது ஒன்றே ஆதலினால், இக்கோவில் தேர்த்திருவிழாவைத், தேரோட்டம் என்று அனைவராலும் புகழப்படத், தான் தோன்றி ஈசனாருந் தேரேறி, அட்டதிக்கும் ஆரவாரிக்க, அடியார்க்கு அருள்பாலித்துத் திருக்கோவில் வலம் வருவார்.

75. இத்தலத்திற் தீர்த்தத் திருவிழாத் தினத்திற் காலையில் நிகழும் சூகர ( பன்றி ) வேட்டைவிழா, பார்ப்பவர்களை அருச்சுனனின் தவத்திற்கே கொண்டு செல்லும் படியாகக் கவர்ச்சி தரும். அவ்விழாவில் ஈசுவரனின் கருணை, யாவருடைய மனமும் உருகும் படியாகச் செய்து மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

## 7. வண்ணை வைத்தீசுவரம்

76. யாழ்ப்பாணத்தில் வண்ணை வைத்தீசுவரர் ஆலயத்தில் நடக்கின்ற விழாக்களிலே, எம்பெருமான் நாயன்மார் நால்வருக்குங் கொடுக்குங்காட்சி, அன்பர்களின் மனத்தைக் கவரும் அற்புதமான காட்சியாகும். வைத்தீசுவரப் பெருமான் என்றும் இத்தலத்தில், அருளாட்சியுடன் திகழ்கின்றார்.

77. வைத்தியநாதப்பெருமான் எமக்குத் தருகின்ற விழாக்களிலே, செம்மனச்செல்வியாம் பிட்டுவாணிச்சி அம்மையின் அன்பினிலே திளைத்து, அவள் அன்போடிட்ட பிட்டமுதை ஏற்று, மண்சுமந்த பெருவிழாப்போல் அங்குத் தரப்படுகின்ற பிட்டும் மகத்துவம் பொருந்தியதாகும்.

அச்சிறப்பு, அப்பெருமான் செய்யும் அருட் கூத்தின் வழியதாகும்.

78. பிராரத்துவ வினைகளினாலே வருந்தும் பக்தர்கள் பாத கமலங்களைப் பணிந்து வேண்டிநிற்க, நந்தையல் நாயகித்தாய் ஒன்பது தினங்களுமே கொலுவிருந்து, கற்பகத்தருப் போல வேண்டியவாறு ஈந்தருளி, நவராத்திரிப் பூசையை ஏற்று, அன்பர்களுக்குப் பல நலங்களையுந் தந்தருளுகிறார்.

பா நடை :

## 8. சட்டநாதர் கோவில்

ஈழத்து மன்னர்கள் ஏற்றமுடன் பேணிவர
வாழவைத்த சட்டநாதர் வழிபடுவோர் துயர்தீர்த்தார்
ஆழமாக உணர்ந்திட்ட அம்மன்னர் தம்மனையைச்
சாலவுமே அருகமைத்துத் தாள்பணிய அருளினரே. 79

சட்டநாதர் பெருமையினைச் சாற்றிடத்தான் வேண்டுவ
திட்டமிட்டோ டுபிரித்துத் திருடர்கள் சூறையாடிப் [தோ
பட்டதுயர் பாரறியும் பக்தர்கள் வியந்தனரே
நட்டம்பு ரிநல்லைநாதர் நாயகியின் அருட்பேறே. 80

## 9. கொழும்பு பொன்னம்பல வாணேசுவரம்

நன்னகரெனும் கொழும்பினிலே நற்கோவில் உருவாகப்
பொன்னம்பல முதலியாரின் புதுமையான கனவினிலே
மன்னுகுறியாய் மாதுளம்ப ழமுமீந்தே அருள்செய்த
பொன்னம்பல வாணேசர் பொற்பாதம் ஏத்துவமே. 81

நித்தியாக்கினி தரிசித்து நித்தியோற்ச வம்நிகழப்
பக்தியுடனே ஆற்றுகின்ற பற்பலவாம் விழாக்களையுஞ்
சக்தியாகிய சிவகாம சுந்தரியும் மகிழவேற்றுப்
பக்தர்களின் பவந்தீர்க்கும் பவளமலை நிகர்வோனே. 82

உரை நடை :

## 8. சட்டநாதர் கோவில்

79. ஈழத்து யாழ்ப்பாண மன்னர்கள் சிறப்பாகப் பேணி வழிபட, அவர்களை வாழவைத்த சட்டநாதப் பெருமான் வழிபடுபவர்களுடைய துயர்களைத் தீர்த்து வைக்கிறார். அதனை நன்குணர்ந்த யாழ் மன்னர்கள் தமது அரண் மனைகளைச் சட்டநாதர் கோவிலுக்கு அருகில் அமைத்துப் பாதங்களை வணங்கிவர அவர்களுக்கு அருள் செய்தார்.

80. சட்டநாதரின் அருட்டிறனை யாவரும் கூறித்தான் உணர வேண்டுமோ? திருடர்கள் ஒடுபிரித்தபடி உள்ளிறங்கிக் களவாடி, அகப்பட்டுப் பட்ட துயரைப், பலருங் கண்ணாரக் கண்டனரே. களவாடப்பட்ட பொருட்கள் அடுத்த நாட் காலையிலேயே கிடைக்கச் செய்தமை ''நல்லைநாதர் நல்லை நாயகியின் அருளின் பேறே'' எனப் பக்தர்கள் பலரும் வியந்து போற்றினர்.

## 9. கொழும்பு பொன்னம்பல வாணேசுவரம்

81. இலங்கையில் நல்ல நகரமாகிய கொழும்பின்கண், சிறந்த சிவதலம் உருவாகும்படி, பொன்னம்பல முதலியாரின் புதுமையான கனவினிலே, பிராமணனும் பிராமணத் தியுமாக எழுந்தருளி, அருட்குறியாகப் பொன்னம்பல முதலியாரிடம் மாதுளம்பழம் ஈந்து, அவர் அதனை உடைத்துப் பார்க்கும் போது, அதனுள் பார்வதி பரமேஸ்வரருடைய தோற்றத்தைக் காணச்செய்து, அருள் கூட்டிய பொன்னம்பலவாணேசருடைய பொற் பாதங்களை வணங்குவோமாக.

82. நித்தியம் வளர்க்கப் படுகின்ற ஓமாக்கினியைத் தரித்து, நித்திய உற்சவம் நிகழப் பக்தியோடு ஆற்றுகின்ற பற்பல விழாக்களையுஞ், சக்தியாகிய சிவகாமசுந்தரி மகிழும் படியாக ஏற்றுப் பக்தர்களின் வினைகளைத் தீர்த்தருளுகின்ற பவள மலையை நிகர்த்த எம்பெருமானே! காத்தருளுக.

பா நடை :

தேர்விழாவிற் பஞ்சரதம் சிறப்புடனே சுற்றிவர
ஆர்வமுடன் பெண்பக்தர் அம்பிகைதேர் இழுத்திடுவர்
சீர்பொலியும் பூரணையிற் சிறீசக்க ரபூசையேற்றுப்
பார்சிறக்கப் பூவையர்க்குப் படியளப்பார் சௌந்தரியே. 83

## 10. வல்லை வைத்தீசுவரம்

### பொது

திருமேனிப் பெரியாரின் கனவினிலே தெளியவைத்துத்
திருத்தலத்தைத் தோற்றுவித்துத் திருப்பொலிய வீற்றிருந்து
வருத்தமுறும் அடியாரின் வல்வினைகள் தீர்த்து வைப்பார்
அருளுருவாம் வல்லையுறை வைத்தீசு வரர்தானே. 84

விக்கினந்தீர் விநாயகனும் எலியின்மேல் ஏறிவரக்
கொக்கினைத்த டிந்தபிரான் கூடிமயில் மீதிவர
நெக்குநின்று ருகுவோரின் நீள்துயர்தீர் உலாவதனிற்
சக்திவாலாம் பிகையுடனே வைத்தீசர் வருவாரே. 85

அம்மையும் அப்பனது மருங்கினிலே அமர்ந்திருந்து
அங்கையில் மலரேந்தி அழகாரும் முடிசூடித்
திங்கள்நேர் நெற்றியிலே திலகமது இலங்கிடவே
அன்பர்கட் கருள்செய்ய அப்பனுடன் வருவாரே. 86

உரை நடை :

83. தேர்த்திருவிழாவில் ஐந்து தேர்கள் சிறப்பாக வீதி வலம் வரும்போது, பெண்கள் பக்தியுடனே அம்பிகையின் தேர் வடத்தைப் பிடித்து இழுத்து வருவது, கண்கொள்ளாக் காட்சியாகும். பூரணைத்தினங்களிற் சிறீசக்கர பூசையை ஏற்றுச், சிவகாமசுந்தரி அம்மையார் பெண்களுக்குப் படி அளப்பது, பெரும் அருட்காட்சியாகும்.

## 10. வல்வை வைத்தீசுவரம் - பொது

84. பக்தராகிய திருமேனிப் பெரியாரின் கனவினிலே தோன்றி, அருள்பாலித்துத் திருத்தலம் அமையச் செய்து, அருள் ஒளி விளங்க வீற்றிருந்து, வருத்தமுறும் அடியார்களின் கொடிய வினைத் துன்பங்களைத் தீர்த்து வைப்பவர், அருளுருவாகிய வல்வை நகர் வீற்றிருக்கும் வைத்தீசுவரப் பெருமானே.

85. வழிபடுவோரின் விக்கினங்களைத் தீர்த்தருளும் விநாயகப்பெருமான் எலியின்மேல் ஏறிவரவுஞ், சூரனாகிய மாமரத்தைப் பிளந்த முருகப்பெருமான் மயிலின்மீது இவர்ந்து வரவும், நெக்கு நெக்குருகி இரக்கும் அடியார்களின் துயரந் தீரும்படியாக, அருட்சக்தியாகிய ஸ்ரீவாலாம்பிகையுடன் வைத்தீசுவரப் பெருமான் வீதிவலம் வருவாரே.

86. அம்மையாகிய ஸ்ரீவாலாம்பிகாதேவியார், அப்பனாகிய வைத்தீசுவரப் பெருமானின் இடப்பாகத்தில் அமர்ந்து, திருக்கரத்தில் மலரேந்தியபடி, அழகிய பொன்முடி சிரசின் மிசைசூடிப் பூரண சந்திரன் போன்ற நெற்றியிற் சிந்தூரப் பொட்டு இலங்கும்படியாக, அன்பர்களுக்கு அருள் பாலிக்கும் பொருட்டு எம்பெருமானுடன் வீதிவலம் வருவார்.

பா நடை :

## அருட்செயல்கள்

### வைத்திசர் வண்டாகி வழித்துணை ஈந்தமை

பத்தனாகித் தினந்தோறும் பணிகள்செய் சோமுவென்பான்
அத்தனது சந்நிதியை அடைந்திரந்து வழிபட்டு
அத்தினத்திற் செய்தொழிற்கு ஆதரவு வேண்டியபின்
சித்தமிகும் பொருள்களோடு வாணிபமே செயச்சென்றான்· 89

அப்பனை நெஞ்சிருத்தி அவ்வழியிற் சென்றிடவே
துப்பினைப் பெற்றதனால் துரத்திவந்த அதிகாரி
தப்பவொ ணாவகையில் வழிமடக்கி வருகையிலே
அப்பனே அபயமென்று அழுதாங்கே துடிதுடித்தான். 88

உற்றதன் அடியானின் உறுதுயரை அகற்றவேண்டி
அற்புதக் கருவண்டாய் அதிகாரி கண்ணைமோதி
உற்றிடு துன்பத்தில் உற்றவனை மயங்கவைத்து
நற்றவன் தப்பிடவே நயந்தருளைச் செய்தவனே. 89

### 2. புத்திரப் பேறீந்து உயிர்காத்தமை

தன்பணியே கருத்தாகத் தன்பதமே தினம்பணியும்
புன்மையிலாச் சிவநேசன் புத்திரப்பே றின்றிவாட
நன்மகப்பே றொன்றீந்து நலமுடனே வாழவைத்த
தண்ணளியான் வல்வையுறை வைத்தீசர் தாள்பணிவாம். 90

உரை நடை :

## அருட்செயல்கள்

### 1. வைத்தீசர் வண்டாகி வழித்துணை ஈந்தமை

87. மிகுந்த சிவபக்தனாகித் தினந்தோறுந் திருக்கோவிற் பணிகள் செய்து வருகின்ற சோமு என்பவன், ஓர்தினம் வைத்தீசுவரப் பெருமானின் சந்நிதியை அடைந்து, வழிபாடு செய்து, அற்றைத்தினம் தான் செய்யும் வியாபாரத் தொழிலுக்குக், காவல்தர வேண்டும் என்று பிரார்த்தித்து, மிகுந்த பொருள்களோடு வியாபார நிமித்தம் கொழும்பு நோக்கிச் சென்றான்.

88. சோமு வழிபடுகின்ற வைத்தியநாதப் பெருமானை நெஞ்சில் இருத்தி வியாபார நிமித்தங் கொழும்பு நோக்கிச் செல்லும்போது, இரகசியச் செய்தி மூலம் அறிந்த வருவாய்த்துறை அதிகாரி ஒருவன் சோமு தப்பிப்போக முடியா வண்ணம் மடக்கி நெருங்கி வருகையிலே, '' அப்பா! வைத்தியநாதா! அபயம் காத்தருள் '' என்று கூவி அழுது துடிதுடித்தான்.

89. அவ்வாறு வருந்திய அன்பனுக்குற்ற துன்பத்தை நீக்க விரும்பி, அந்நேரம் அற்புதமான பெரிய கருவண்டு வடிவமாகி அவ்வதிகாரியின் கண்ணில்மோதி, அத்துன் பத்தால் அதிகாரியை மயங்க வைத்து, நற்றவத்தையுடைய சோமு, தப்பிப்பிழைக்கும் படியாகச் செய்த அருளாளனே அபயம்.

### 2. புத்திரப்பேறீந்து உயிர்காத்தமை

90. தனது கோவிற்பணிகளிலே கருத்தாகச் செயற்பட்டுத், தினமும் தனது பாதங்களைப் பணிந்துவரும் கீழ்மைக் குணமில்லாத சிவநேசன் என்பவன், புத்திரப்பேறுஇல்லாமையினாலே நாளும் இரந்துநின்று வருந்த, நன்மகவு ஒன்றுஅளித்துச் சிறப்பாக வாழவைத்த, வல்லை வைத்தீசுவரப் பெருமானின் பாதகமலங்களைப் பணிந்து அருள்பெறுவோமாக.

பா நடை :

வடமராட்சி வன்செயலால் வாடிடவே இராணுவந்தான்
இடமெலாம் பிணம்பெருக எங்கணுமே சூழ்ந்துநின்று
படலைவரை வருத்தலுமே பத்தனவன் கதிகலங்க
விடமுண்டான் வழிகாட்டி வெந்துயரிற் காத்தனனே. 91

### 3. மனக்குறை தீர்த்து மாண்பளித்தமை

உள்வீதி பெருக்கியே உவப்பாகத் தொண்டியற்றுங்
கள்ளமில்லா அன்பனாங் கதிர்காமன் திருமணந்தான்
நல்லருளாள் அம்பிகை சந்நிதியில் நடக்கையிலே
பல்லியொன்று சொல்லிடப் பக்தனவன் கலங்கினனே. 92

மங்கலமே வருந்தாதே மதுரையை அடைவீரேல்
அங்கயற்கண் அம்மைமுன்பு அற்புதங்கள் தந்திடுவோம்
என்றம்மை குறிப்புணர்த்தி இன்மதுரை அடைவித்துத்
தன்கையிற் தாலிசேர்ப்பித் ததைமீண்டும் அணிவித்தாள்.

மீண்டுமங்கு மாலைமாற்றி மேன்மைபெற அணிவித்து
ஈண்டுமது துயர்விடுவீர் இன்மகவுந் தந்திட்டோம்
மாண்புடைய தலங்களிவை வணங்கிடுவீர் என்றுணர்த்த
ஆங்கவர்தாம் அம்மையப்பர் அருளதனில் மூழ்கினரே. 94

### 4. சிறுநோய்கள் தீர்க்க வழிவகுத்தமை

சுக்கிரவா ரந்தோறும் தூயவாகும் பணிகளாற்றி
நெக்குநெக்கு ருகுமன்பன் நிலையதுகண் ணூறாகித்
துக்கமேவி ளைந்துகைகால் சோரவிமை எரிவுகொள்ள
பக்கமாய்ப் படுக்கவொண்ணா தேபதியினை இரந்துநின்
றான். 95

உரை நடை :

91. வடமராட்சிப்பகுதி வன்செயல் காரணமாக வாடி வதங்கும் போது, இராணுவமானது இடமெல்லாம் பிணம் பெருகும்படியாகச் சூழ்ந்து நின்று, தெருப்படலை வரை வந்து வருத்துதலும், பத்தனாஞ் சிவநேசன் செய்வதறியாது கதிகலங்கிக் குறிப்பாகக் காட்டிய வழியே சென்று, புகைப் போக்கியில் மறையச்செய்து அன்பனையுங் குடும்பத்தையும் உயிர்வதையில் நின்றுங் காத்தருளியவர் வைத்தீசுவரரே.

## 3. மனக்குறை தீர்த்து மாண்பளித்தமை

92. வெள்ளிக்கிழமைகளிலுந் திருவிழாக் காலங்களிலும், விசேடதினங்களிலும், அதிகாலையில் ஆலயத்தை அடைந்து உள்வீதி பெருக்கி நீர் தெளித்து உவப்புடனே தொண்டுகள் செய்துவரும் கதிர்காமன், தனது திருமணத்தை நல்லருளைச் செய்கின்ற வாலாம்பிகாதேவி சந்நிதியில் நிகழ்த்தும் போது, தாலியைக் கையில் எடுக்கையில் பல்லியொன்று சொல்லவே மிகவும் வருந்தினான்.

93. அப்பொழுது அம்பாள் பல்லி சொல்லும் மங்கலமே வருந்தாதே. மதுரையை விரைவில் அடைவீர்களானால் அம்மை முன்பு அற்புதங்கள் நிகழச் செய்வோம்'' என்று குறிப்பாலே உணரச்செய்து மதுரை மீனாட்சிவாசலை அவர்கள் அடைந்தபோது அத்தாலியைத் தனது கரத்தில் ஏற்று மீண்டும் முறைப்படி அணியச்செய்தாள்.

94. திரும்பவும் மணமக்களைத் திருமணமாலை மாற்றி அணியச்செய்து, ''கவலையை ஒழியுங்கள் மகப்பேறுந் தந்தோம். மாண்புடைய இந்தத் தலங்களை வணங்குவீராக'' என்று குறிப்பினால் உணர்த்த அவர்கள் மீனாட்சி சுந்தரேசப்பெருமானின் அருட்கடலில் மூழ்கினார்கள்.

## 4. சிறுநோய்கள் தீர்க்க வழிவகுத்தமை

95. வெள்ளிக்கிழமை தோறுந் திருத்தொண்டு செய்து சந்நிதி முன்பு நின்று நெக்குருகும் அன்பன் ஒருவனது தொழிற்றிறமை கண்ணூறாகி, அவனது கைகால்கள் சோர்ந்து கண்ணிமை எரிந்து படுக்க முடியாது வருந்திய நிலையில் வேதனையை அம்மை அப்பரிடம் முறையிட்டுத் தீர்க்கும்படி வேண்டி நின்றான்.

பா நடை :

அன்பனது துயரந்தீர அன்னையுங் குறிப்புணர்த்த
நன்றெனவே குறிப்புணர்ந்து நாயகன்மேல் ஆணையிட்டு
ஒன்றொழியைந் துகர்ப்பூரம் உடலையுஞ் சுற்றியெரித்துத்
தன்துயரம் நீங்கிடவே தாயருளைப் போற்றிநின்றான். 96

படுக்கையில் உழலுங்கால் பரமன்மேல் ஆணையிட்டு
அடுத்திடு நான்குபக்கங் கர்ப்பூரம் சூழ்ந்தெரித்துக்
கடுவிடம் உண்டான்கா வல்நீற்றால் காவலிட
படுதுயர் நீங்கியாங்கே பாங்காகத் துயில்வருமே 97

காவல் நீறு

ஐங்கோண முக்கோண ஐந்தெழுத்து நீற்றினிலே
ஐந்துமுகன் பிரணவத்தை அதன்நடுவிற் பதித்திட்டு
ஐந்துமூலை யுடனதிலும் கர்ப்பூரம் வைத்தெரிக்க
ஐந்தெழுத்தின் பேறுதவும் காவல்நீ றுபெறலாமே. 98

( இதற்குரிய படம் இறுதிப் பக்கத்தில் இடம்பெறுகிறது. )

## 5. திருஐந்தெழுத்தோத வழித்துணை ஈந்தமை

அந்திமாலை கடந்ததுமே அவ்வழிதான் அபாயமென
தந்தைதான் தயங்கிடவே தண்ணளியார் வைத்தீசர்
ஐந்தெழுத்தை ஓதிடவே ஆட்சியுள்ள மைந்தனவன்
வந்தவுசுப் பதுதான் வழித்துணையாய்க் கொணர்ந்தாரே.
99

உரை நடை :

96. அன்பன் படுந்துன்பத்தை நீக்குகின்ற வழியைத் தாயார் குறிப்பினாலே உணர்த்த, அவனும் அக்குறிப்பினை உணர்ந்து, ஆதிசிவன்மேல் ஆணையிட்டு, நான்கு கர்ப்பூரத் துண்டுகளை உடலையும் படுக்கையையுஞ் சுற்றி எரித்துத் தன் துயரம் நீங்கித், தாயருளைத் துதித்துப் பரவசமானான்.

97. படுக்கையில் நித்திரையின்றி உழலும், போது பக்தியோடுஆதி சிவன்மேல் ஆணையிட்டு ஒருகர்ப்பூரத் தகட்டை எடுத்துப் படுக்கையைச் சுற்றிவந்து, ஒருபக்கத்திற் போட்டு "எல்லாத் தோசங்களும் நீங்கவேண்டும்" என்று கூறி எரிக்க வேண்டும் இப்படியே நாலுபக்கமும் போட்டு எரித்த பின் ஆதிசிவனின் காவல் நீற்றைப் படுக்கையைச் சுற்றிக் காவலாய் இட்டுப் படுக்கத் துயர் நீங்கி நித்திரை வருமே

காவல் நீறு

98. திருநீற்றைப்பரவி அதன் மேல் ஐங்கோண முக்கோண சக்கரமிட்டு, ஐங்கோணங்களிலும் முச்சூலம் பொறித்து ஐந்தெழுத்தையும் பொறித்து ஆதிசிவனின் அருளை வேண்டி அதன் நடுவினில் "ஓம்" என்ற பிரணவத்தைப் பொறித்து, அதிலும் ஐந்து மூலைகளிலும் கர்ப்பூரம் வைத்துப் பஞ்சாட்சரம் ஓதி எரிக்கத் திருஐந்தெழுத்தின் மகிமைசெய் காவல்நீறு பெறலாம்.

## 5. திருஐந்தெழுத்தோத வழித்துணை ஈந்தமை

99. தந்தையும் மகனுமாக வழிநடந்து வரும்பொழுது இரவு 'நெருங்கப் பயங்கரமான வல்லை வெளியைக்கடந்து செல்வது அபாயம்' எனத் தந்தையார் கூற, வல்வை வைத்தீசரை நெஞ்சிருத்தித் திருஐந்தெழுத்தை ஓதிப்பயிற்சியுள்ள மகனானவன் வைத்தியநாதனை நினைந்து திருஐந்தெழுத்தை ஓதிவேண்டலும், எம்பெருமான் உசுப்புக் கலையைக்கொடுத்துச் சுகமே வந்து சேரும்படி செய்தார்.

பா நடை :

## 11. ஈழத்துச் சிதம்பரம் — காரைநகர்

காரைநகர் ஆலயத்தைக் கனகசபை எனக்கருதி
வாரையணி சௌந்தராம்பி கைசமேத சுந்தரராய்ப்
பாரைவளம் படுத்திடவே பாங்காக வீற்றிருந்து
தேர்தனிற் பவனிவந்து திருவாதிரை யாடுவரே. 100

திருச்சிற்றம்பலம்.

### பூர்த்தி

அம்மையப்பர் அருளாட்சித் தலங்களது மகிமைகளும்
தம்மன்பர் துயர்தீர்த்தே ஆடல்செய் தண்ணளியும்
தம்மகத்தே கொண்டன்பர் மகிழவைக்கும் இந்நூல்தான்
நம்பனுடை அடியவர்க்கு நல்மருந்தாம் பேறுடைத்தே.

சக்திசிவனின் அருளாட்சி யாமிதனைச் சகமதிலே
பக்தியுடன் படிப்போர்கள் கேட்போர்கள் கேட்டவற்றை
எத்திசையும் உரைப்போர்கள் இப்புவியிற் துயர்தீர்ந்து
அத்தனருளால் அம்மையிலும் அவன்கழலைச் சார்வாரே.

### வாழ்த்து

அன்பரோ டறவோர் வாழ்க அருட்பணி எங்கும்மிளிர்க
தண்ணளி ஆட்சிசெய்க தண்புனல் தவறா தாக
பண்பிலாச் செயல்கள் ஒழிக படுந்துயர் அரசால் நீங்க
இன்னருட் சைவம் வளர்க இறையருள் ஓங்க ஓங்க.

திருச்சிற்றம்பலம்

சக்தி சிவன் அருளாட்சி நூல் முற்றிற்று.

உரை நடை :

### 11. ஈழத்துச் சிதம்பரம் — காரைநகர்

*100.* ஈழத்தில் காரை நகரில் பொருந்திய சிவாலயத்தைத் தில்லையிலுள்ள கனகசபையாகக் கருதி வழிபட்டு வருதலால் அருளாட்சி செய்யும் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேசுவரப்பெருமான், ஈழத்தை வளம்படுத்தச் சிறப்பாக வீற்றிருந்து அருள்பாலித்து மார்கழித் திருவெம்பாவை நவ நாளில் பஞ்சரதபவனி வந்து திருவாதிரையில் அருள்நடனம் ஆடித் தரிசனந்தந்து அருள்வாரே.

சக்தி சிவன் அருளாட்சி நூல் முற்றிற்று.

**அநுபந்தம் : 1**

உ

சிவமயம்

# சிவனருட் போற்றித் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

முத்தியைத் தருவாய் போற்றி மூவரில் முதல்வா போற்றி
சித்திகள் புரிவாய் போற்றி சிவபுரத் தரசே போற்றி
புத்திரப் பேற்றை ஈந்து பொன்றலிற் காத்தோய் போற்றி
பக்தரின் பவந்தீர் வைத்திய நாதனே போற்றி போற்றி.

சங்கவெண் குழையோய் போற்றி சங்கர சிவனே போற்றி
மங்கையோர் பாகா போற்றி மான்மழு தரித்தாய் போற்றி
மந்திர உச்சா டணத்தால் வழித்துணை ஈந்தாய் போற்றி
நம்பினோர்க் கருளும் நல்லை நாதனே போற்றி போற்றி.

கண்ணப்பக் களித்தாய் போற்றி
காலனை உதைத்தாய் போற்றி
மண்சுமந்து மகிழ்ந்தாய் போற்றி
மதுரையை ஆண்டோய் போற்றி

வண்டாகி வழிக்குத் துணையாய்
வந்தருள் ஈசா போற்றி
விண்ணோரும் விரும்பும் வண்ணை
நாதனே போற்றி போற்றி. 3

தில்லையின் கூத்தா போற்றி
தென்னவர்க் குயிரே போற்றி
எல்லையில் உரனோய் போற்றி
இமையவர் தலைவா போற்றி
தொல்லைசெய் சிறுநோய் தீர்க்கும்
அருட்குறி தெரித்தோய் போற்றி
வல்வினை தீர்க்கும் வல்வை
நாதனே போற்றி போற்றி. 4

ஆனாயன் இசையைப் பருகி அரனுல களித்தாய் போற்றி
கூனாரும் பாண்டி மன்னன் கூனினைத் தீர்த்தாய் போற்றி
தேனாருங் கொன்றை சூடித் திருநடம் புரிவோய் போற்றி
வானோர்க்கும் மருந்தாம் தில்லை நாதனே போற்றிபோற்றி

கண்ணுதல் உடையாய் போற்றி
கங்கையை அணிந்தோய் போற்றி
திண்ணனின் அன்பிற் றிளைத்துத்
திருமருங் களித்தோய் போற்றி
கண்ணனின் கண்ணை ஏற்றுச்
சக்கரம் ஈந்தோய் போற்றி
நண்ணினர் துயரந்தீர் மதுரை
நாதனே போற்றி போற்றி. 6

இடபக் கொடியாய்போற்றி ஏற்றினில் ஊர்வோய் போற்றி
நடனம் புரிந்தே என்றும் நல்லுயிர் புரப்பாய் போற்றி
படருந் துயரந் தீர்த்தே பக்தரைக் காப்போய் போற்றி
நடமே உவக்குந் தில்லை நாதனே போற்றி போற்றி. 7

இன்னருள் ஊற்றே போற்றி
இசையினை உவப்போய் போற்றி
பண்ணிசைப் புலவோய் போற்றி
பரவுவோர்க் கருள்வோய் போற்றி

அன்புடன் தொண்டு செய்யும்
ஆர்வலர்க் கமுதே போற்றி
வன்பிணி தீர்க்கும் வல்லை
நாதனே போற்றி போற்றி. 8

அன்னையாய் அணைப்பாய் போற்றி அப்பனாய்ப்
புரப்பாய் போற்றி
என்னையும் படைத்தாய் போற்றி இறையறி உணர்வு தந்து
உன்பணி செய்தே நாளும் உவப்புற வைத்தாய் போற்றி
புன்செயல் பொறுப்பாய் வல்லை நாதனே போற்றிபோற்றி.

சித்தரிற் சித்தா போற்றி சிவபரம் பொருளே போற்றி
பக்தியாய் யாத்திரைகள் பலன்பெற வைத்தாய் போற்றி
சித்தமே கலங்கி நோயாற் செய்வது தேரேன் ஐயா
அத்தனே ஆள்வாய் தில்லை நாதனே போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்

**அநுபந்தம் : 2**

சிவமயம்

# சிவசக்தி போற்றித் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

ஆருயிர்க்கு அன்னையே போற்றி
அருளூற்றாய் மிளிர்வோய் போற்றி
பாருலகைப் படைத்தாய் போற்றி
பல்கலையாய் ஒளிர்வோய் போற்றி
சீருடைய வைத்தீசு வரனின்
திருமருங்கில் அமர்வோய் போற்றி
தேரும்நான் மறைபோற்றுந் தாயாஞ்
சிவசக்தி போற்றி போற்றி. 1

திருவிளங்குஞ் சிவகாமியே போற்றி
திரிபுவன சுந்தரியே போற்றி
பெருமதுரை மீனாட்சியே போற்றி
பீடுடைய மனோன்மணியே போற்றி

மருவிவரும் அடியார்களின் வினைதீர்
வைத்தீசு வரித்தாயே போற்றி
அருள்வாரி அன்னையேயுன் அருட்பாத
மலர் போற்றி போற்றி. 2

சங்கரி பைரவி போற்றி தயாநிதி பார்வதி போற்றி
மங்கள தாரணி போற்றி மலைமகள் மகேஸ்வரி போற்றி
சங்கணி மாயவன் தனது மாண்புடைச் சோதரி போற்றி
நங்குறை தீர்க்கும் உன்தன் நற்பதம் போற்றி போற்ற். 3

நிறைமதி வதனம் போற்றி நீள்விழி மலர்கள் போற்றி
மறைபுகழ் நுதலே போற்றி மங்கலத் திலகம் போற்றி
இறை மகிழ் மேனீ போற்றி இதமருள் கரங்கள் போற்றி
அறை தரு காலன்துயரில் ஆண்டருள் தாயே போற்றி. 4

கல்யாணி கௌமாரி போற்றி
காமாட்சித் தாயே போற்றி
தில்லையூர்ச் சிவகாமி போற்றி
சிவசக்தித் தாயே போற்றி
எல்லையில் அருட்தாயே போற்றி
இன்பத்தின் ஊற்றே போற்றி
வல்வினை தீர்த்தருளும் வாலாம்
பிகைத்தாயே போற்றி போற்றி. 5

பிள்ளைத்தமிழ் உவந்தோய் போற்றி
பேற்றினை அளித்தோய் போற்றி
பிள்ளைப்பிரான் உவப்போய் போற்றி
பிஞ்ஞகன் பாதியே போற்றி
கள்ளம்இலா அன்பர் தமக்குக்
கண்ணருள் புரிவோய் போற்றி
நள்ளிருளிலே நட்டம் பயில்வோன்
தேவியே போற்றி போற்றி. 6

தேவரது துயரைத் தீர்த்த
மகிடாசுர மர்த்தனியே போற்றி
ஆவலோடு நோன் பியற்றி
அமலன்பா திபெற்றவளே போற்றி

ஆர்வமோடு நவநாள் நோன்பர்ச்
சிப்போருக் கருள்பவளே போற்றி
பாவவினை நீக்கி அருளும்
பாக்கியவ தியேபோற்றி போற்றி 7

நின்றும் இருந்தும் நின்னைத்துதித்திட அருள்வோய் போற்றி
இன்பவடிவாய் மிளிர்ந்து இரந்திட அளிப்போய் போற்றி
அன்பர் உள்ளக்கமலம் ஆட்சியாய் உறைவோய் போற்றி
என்றும் எங்கும் நிறைந்த எந்தாயே போற்றி போற்றி. 8

பவள மலையில் படரும் மரகத ஒளியே போற்றி
பவத்தால் வாடும்அன்பர் பவமகல் துணையே போற்றி
அவமாய் அலையும் பேதை அணைந்திட அருள்வோய்
போற்றி
தவமே புரிவார் மகிழும் தயாநிதி போற்றி போற்றி. 9

நற்றிரு வாலாம் பிகையாய் நற்பதம் தந்துகாத்து
பற்பல இடங்கள் சென்று பல்கலைதெளியச் செய்து
நற்பணி ஆற்றும் வழியில் நற்றலம் பரவச்செய்தாய்
பெற்றிடச் சுகத்தை அருள்வாய் பூரணி போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்

**அநுபந்தம் : 3**

உ
சிவமயம்

# அருள்மிகும் தில்லை நடராசர் அருட் கூத்து

திருச்சிற்றம்பலம்

ஐயன் கூத்தாடுஞ் சிதம்பரமே
அணிதில்லை வெளிதனிலே எந்நாளும்
தையல் நாயகியாஞ் சிவகாமித்
தாயாரும் மகிழ்வுடனே நோக்கிடவும்
வையந் தளைத்திடவும் ஐந்தொழில்கள்
நிகழ்ந்திடவும் நாடகநூல் சிறப்புறவும்
கையசைவுடனே காலசைவும் பொருந்திடவும்
அன்பர்கள் ஏத்திடவும்
[ ஐயன் கூத்தாடுஞ் சிதம்பரமே ]

அநுபந்தம் ; 4

சிவமயம்

# தில்லை நடராசர் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

துந்துபி ஓசையும் முழங்கத் தும்புரு நாரதர்பாட
நந்தியும் மத்தளங்கொட்ட நான்முகன் போடிடத்தாளம்
நந்தனுங் கையினை அசைக்க நானிலந் தழைத்திட என்றே
திந்திமி திமிஎன நடனம் ஆடிடுஞ் சிற்பரா சரணம். 1

சடையினிற் கங்கையாள் ஓடு சந்திரன் தானுமேஆட
இடையினில் உரகம தோடுஇலங்கிடும் மானுமேஆட
நடைபயில் தேவியுங்காண நந்தியுங் கணமுமேஆட
அடைந்தவர் துயரினைத்தீர்க்க ஆடிடும் அண்ணலே சரணம்.

நடமிடுந் தோற்றமேஉலகாய் நானிலந் தழைத்திடஎன்றே
இடமெனுங் காலினைத்தூக்கி இசைவுறு வலதுகரத்தைத்
திடமுடன் உயர்த்தியேநின்று திந்திமி திமியென ஆடும்
இடமகல் தில்லையின் சோதிஏழையேன் உனதடி சரணம்

முனிவரும் அந்தணர்தாமும் முதுமறை ஆகமம்ஓதக்
கனிவுடன் அம்மையும் நோக்கக் கண்ணனும் பிரமனும்ஆட
அணிகலன் அமைவுடன் அசைய அம்பலம் அதனிலேநின்று
தனிநடம் புரிந்திடுந் தேவே தமியனேன் உனதடி சரணம். 4

உடுக்கையே உலகினைப் படைத்தலை
ஒளிவிடும் அங்கியே அழித்தலை
நடுவினில் அபயமே காத்தலை
நாடக பாதமே அருளலை
நெடுநிலம் ஊன்றிய பாதமே
நிலையினை மறைத்தலை உணர்த்திட
நெடிதுமே உலகமும் நிலைத்திட
ஆடிடும் அண்ணலே சரணம். 5

சிதம்பர தரிசனம் வேண்டித் தில்லையின் வெளியிலே நின்று
பதமலர் இறைஞ்சியே நின்ற பத்தனாம் நந்தனுக் கிரங்கிப்
பதம்பணி அந்தணர் தம்மைப் பதிதொறும் கனவினிற்பணித்து
இதமுடன் அழைத்தருள் புலியூர் ஈசனே உனதடி சரணம். 6

புத்தனாம் நந்தியும் வந்து புனிதமாம் மன்றினில் அமர்ந்து
இத்தினம் வாதினில் வென்று எண்ணிய முடிப்பதாய்க் கழற
பத்தராம் அந்தணர் கலங்கப் பாவியை வென்றிடக் கனவிற்
சித்தராம் வாசகற் குரைத்த சிற்பரா உனதடி சரணம். 7

அப்பனை நினைத்திடும் அளவில் அபயமே அளித்திடுங் கரமும்
இப்பதம் நினைத்திட மேலாம் இன்பமும் எய்திடும் என்றே
ஒப்பிலா வரதமே காட்டும் உயர்த்திய பாதமும் தோன்றும்
துப்பருள் முதல்வனே அபயம் துயர்நிலை நீக்கியே அருள்வாய்.

வாதவூர் அண்ணல்பாடிய வண்டமிழ் வாசகம் ஓதிப்
பாதக வினையின் நீங்கிடு பக்தரில் மேவிய அன்பால்
ஆதரவுடனே எழுதியும் அம்பலம் அதனிலே வைத்த
மேதகு கூத்தா அடியனேன்வேண்டியவரத்தினை அருள்வாய்

பதஞ்சலி முனியுடன் புலியும் பக்தியாய் வேண்டிட இரங்கி
இதமுடன் நடனமும் ஆடி இன்பமும் துய்த்திட வைத்தோய்
நிதமுமே நிர்ணயம் பூண்டு நிமலநின் நாமமே ஏத்திப்
பதமலர் இறைஞ்சியே நிற்கும் பாவியேன் வேண்டிய
தருள்வாய்.

திருச்சிற்றம்பலம்

அநுபந்தம் : 5

உ
சிவமயம்

# சிவாலயங்களில் ஓதுதற்குரிய கூட்டுப் பிரார்த்தனை மலர்கள்

ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம்
ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம்
ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம்

அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி
அடிமுதல் நடுவும் ஆனாய் போற்றி
அரியயன் காணா ஒளியே போற்றி
அட்டமா சித்தி உடையாய் போற்றி
அட்ட மூர்த்தியாய் உள்ளாய் போற்றி
அம்பலத்தாடும் அரசே போற்றி
அம்பிகை பாகம் உடையாய் போற்றி
அன்பர் உள்ளத் தமுதே போற்றி
அஞ்சல் என்று அருள்வாய் போற்றி
ஆரா அமுதே அருளே போற்றி
ஆனந்த வாரியாம் இறைவா போற்றி
ஆரூர் அமர்ந்த அரசே போற்றி
ஆலவாய் அமர்ந்த அரனே போற்றி
இமையவர் தலைவா போற்றி
இன்பத்தின் ஊற்றே போற்றி
இயற்றமிழ்ப் புலவா போற்றி
இசைத்தமிழ்ப் புலவா போற்றி
உலகினைப் படைப்பாய் போற்றி
உலகினைக் காப்பாய் போற்றி
உலகினை விரிப்பாய் போற்றி
உலகினை அழிப்பாய் போற்றி
எங்கும் நிறைந்தாய் போற்றி
எல்லாம் உடையாய் போற்றி

எம்தமைப் புரப்பாய் போற்றி
ஏதிலர்க் கருள்வாய் போற்றி
ஐந்தொழில் புரிவாய் போற்றி
ஐம்பூதம் ஆனாய் போற்றி
ஒழிவற நின்ற ஒருவனே போற்றி
ஓங்காரப் பொருளே போற்றி
கங்கா தரனே போற்றி
கால காலா போற்றி
கடம்ப வனத்தாய் போற்றி
கல்யாண சுந்தரா போற்றி
கனகக் குன்றே போற்றி
கைலாச வாசா போற்றி
கழுநீர் மாலை அணிவோய் போற்றி
கரிக்குருவிக்கு அருளினோய் போற்றி
கிருபா நிதியே போற்றி
கீரனைத் தடிந்தோய் போற்றி
குருத்துரோகியை வதைத்தோய் போற்றி
கூற்றினை உதைத்தோய் போற்றி
குற்றாலக் கூத்தா போற்றி
கொன்றைமாலை உவப்போய் போற்றி
சங்கர சிவனே போற்றி
சதாசிவ மூர்த்தியே போற்றி
சந்திர சேகரா போற்றி
சான்றோர்க்கு ஒளியே போற்றி
சிவபுரத் தரசே போற்றி
சிதம்பர நடேசா போற்றி
தட்சணா மூர்த்தியே போற்றி
தவத்தினை உவப்போய் போற்றி
தடாதகை மணாளா போற்றி
தத்துவங் கடந்தோய் போற்றி
தருமிக்கு அருளினோய் போற்றி
தாயும் ஆனவரே போற்றி
தில்லையின் கூத்தா போற்றி
திரிபுர தகனா போற்றி
திருப்பணி உவப்போய் போற்றி
தீன தயாளா போற்றி

துரியங் கடந்தோய் போற்றி
துன்பம் துடைப்பாய் போற்றி
நஞ்சணி கண்டா போற்றி
நந்தனுக் கருளினோய் போற்றி
நரி பரியாக்கிய சித்தா போற்றி
நாரைக்கு முத்தி கொடுத்தோய் போற்றி
நீறுபூசிய மெய்யாய் போற்றி
நிர்மலனாகிய சிவனே போற்றி
நெற்றிக் கண்ணை யுடையோய் போற்றி
நேரலர் தமக்கு நெருப்பே போற்றி
பவவினை அறுக்கும் தேவே போற்றி
பாவ விமோசனா போற்றி
பக்த கௌரியை ஆண்டோய் போற்றி
பார்வதி மகிழும் மணாளா போற்றி
பளிங்கின்திரள் அனையாய் போற்றி
பனிமலை என்றும் உவப்போய் போற்றி
புரங்களை எரித்தாய் போற்றி
புண்ணியர்க்கு அருள்வோய் போற்றி
பேராயிரம் உடையாய் போற்றி
பெருந்துறை தன்னை நயப்போய் போற்றி
மங்கள சொரூபா போற்றி
மான்மழு தரித்தோய் போற்றி
மண்சுமந்த கூத்தா போற்றி
மாதுலனாகிக் காத்தோய் போற்றி
மந்திரமாமலை ஆள்வோய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
மலைமகள் மணாளா போற்றி
மாதுமை பாகா போற்றி
முப்புரம் எரித்தோய் போற்றி
மூவர்க்கும் முதல்வா போற்றி
வளையல் விற்ற வணிகனே போற்றி
வாதவூரனை ஆண்டோய் போற்றி
வன்தொண்டனின் தூதே போற்றி
வலைஞனாய் வந்தோய் போற்றி
வானவர்க்கரிய மருந்தே போற்றி
வானோர் போற்றுந் தேவே போற்றி

வெள்ளியம்பலக் கூத்தா போற்றி
வேண்டியயாவுந் தருவாய் போற்றி
வல்லை வைத்தியநாதனே போற்றி
வல்லை வாலாம்பிகையே போற்றி

ஓம் கங்காதராய நம ஓம் ஓம் கல்யாணி நம ஓம்
ஓம் கால காலாய நம ஓம் ஓம் கால காளி நம ஓம்
ஓம் கிருபாநிதியே நம ஓம் ஓம் கிருபைத்தாயே நம ஓம்
ஓம் சங்கரனே நம ஓம் ஓம் சங்கர்யே நம ஓம்
ஓம் சிவாய நம ஓம் ஓம் சிவாயை நம ஓம்
ஓம் சதாசிவாயநம ஓம் ஓம் மனோன்மணியே நம ஓம்
ஓம் தயாநிதியே நம ஓம் ஓம் தயாகர்யை நம ஓம்
ஓம் திரிகுண னேநம ஓம் ஓம் திரிகுணாயை நம ஓம்
ஓம் தியாகேசாய நம ஓம் ஓம் தியாகேஸ்வரியே நம ஓம்
ஓம் திரிபுர தகனா நம ஓம் ஓம் திரிபுரசுந்தரியே நம ஓம்
ஓம் நாத ரூபனே நம ஓம் ஓம் நாத ரூபாயை நம ஓம்
ஓம் மகா தேவாய நம ஓம் ஓம் மகாதேவியே நம ஓம்
ஓம் மகேஸ்வராய நம ஓம் ஓம் மகேஸ்வரியே நம ஓம்
ஓம் வைத்தீசுவராய நம ஓம் ஓம் வைத்தீசுவரியே நம ஓம்
ஓம் விஸ்வ நாதாய நம ஓம் ஓம் விஜயாயை நம ஓம்

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி.

( சிற்சபேசா சிவசிதம்பரம்
சிற்சபேசா சிவசிதம்பரம்
சிற்சபேசா சிவசிதம்பரம்.

ஓம் நம பார்வதி பதியே ஓம் அரகர மகாதேவா
ஓம் நம பார்வதி பதியே ஓம் அரகர மகாதேவா
ஓம் நம பார்வதி பதியே ஓம் அரகர மகாதேவா.

அநுபந்தம் : 6

# சிவபெருமானை வழிபடற்குரிய அர்ச்சனை மலர்கள் (நாமங்கள்)

பொருள்

ஓம் விச்வ நாதாய நம
(உலகம் அனைத்திற்கும் இறைவன்)
ஓம் மகேச் வராய நம (பேரிறைவன்)
ஓம் மகா தேவாய நம (பேரிறைவன்)
ஓம் வைத்தீஸ்வராய நம
(ஆன்மாக்களின் பிறவிப்பிணி தீர்ப்பவன்)
ஓம் அர்த்த நாரீசாய நம (பாதி பெண் உருவமானவர்)
ஓம் ரிஷப வாகனாய நம (எருதை வாகனமாக உடையவர்)
ஓம் உன் மத்தாய நம (பித்தன்)
ஓம் கங்காதராய நம (கங்கை நதியைத் தரித்தவர்)
ஓம் கால காலாய நம (காலத்தைவென்றவர்,
யமனை உதைத்தவர்)
ஓம் கிருபாகரனே நம (கருணை நிறைந்தவர்)
ஓம் கைலாச வாசினே நம (கைலையில் வசிப்பவர்)
ஓம் சந்திர சேகரா நம (சந்திரனைச் சூடியவர்)
ஓம் சங்கரனே நம (சுகத்தைச் செய்பவர்)
ஓம் சூலபாணியே நம (சூலாயுதத்தைத் தரித்தவர்)
ஓம் டக்காவதே நம (உடுக்கையை உடையவர்)
ஓம் தியாகேசாய நம (துறவிகளுக்கு அரசன்)
ஓம் திரிலோக குடும்பனே நம
(மூன்று உலகும் குடும்பமாக உடையவர்)
ஓம் திரி நேத்திராய நம (மூன்று கண்களை உடையவர்)
ஓம் நமசிவாய நம (மூல மந்திரம்)
ஓம் நடனேசாய நம (நடனம் புரிபவர்)
ஓம் நீல கண்டாய நம (நீல நிறக்கண்டத்தையுடையவர்)

ஓம் பசுபதேய நம ( உயிர்களுக்குத் தலைவன் )
ஓம் பிக்ஷாடணாய நம ( இரந்து உண்பவர் )
ஓம் மிருகபாணியே நம ( மானைக் கையில் ஏந்தியவர் )
ஓம் விஸ்வரூபாய நம ( பேருரு உடையவர் )
ஓம் சிவாய நம ( மங்களகரமானவர், மூலமந்திரம் )

அநுபந்தம்: 7


# சக்தி வழிபாட்டிற்குரிய அர்ச்சனை மலர்கள் (நாமங்கள்)

ஓம் சிவாயை நம ( மங்களகரமானவர் )
ஓம் அக்ஷராயை நம ( ஓசை வடிவானவர் )
ஓம் அஜாயை நம ( எப்பொழுதும் உள்ளவர் )
ஓம் அபயப் பிரதாயை நம ( பயமின்மையைத் தருபவர் )
ஓம் அவவர்க்கப் பிரதாயை நம ( முத்தியளிப்பவர் )
ஓம் அன்னபூர்ணாயை நம ( உணவு அளிப்பவர் )
ஓம் உமாதேவ்யை நம ( உமாதேவி )
ஓம் கல்யாண்யை நம ( மங்களம் உடையவர் )
ஓம் காமேச்வர்யை நம ( ஆசையை நிறைவேற்றுபவர் )
ஓம் சங்கர்யை நம ( சுகஞ் செய்பவர் )
ஓம் சித்திரூபாய நம (எடுத்தகருமஞ் சித்திபெறச்செய்பவர்)
ஓம் தகராகாச ரூபிண்யை நம ( அறிவொளி வடிவானவர் )
ஓம் தமோநா சின்யை நம ( அஞ்ஞான இருள் நீக்குபவர் )
ஓம் தயா கர்யை நம ( அன்பு பாராட்டுபவர் )
ஓம் தியான கம்பாயை நம
( தியானத்தால் அடையப்படுபவர் )
ஓம் திரிபுரசுந்தர்யை நம
( மூன்று புரங்களையும் அலங்கரிப்பவர் )
ஓம் திரிகுணாயை நம ( முக்குண வடிவினர் )

ஓம் நாதரூபாயை நம ( ஓசை வடிவினர் )
ஓம் பவான்யை நம
( இயற்கையில் உயிர்களைத் தோற்றுவிப்பவர் )
ஓம் பிரக்ருதிரூபாயை நம ( இயற்கை வடிவினர் )
ஓம் பிரபன்னதுக்க காரிண்யை நம
( தோன்றும் துக்கத்தை நீக்குபவர் )
ஓம் மகாசக்த்யை நம ( பேராற்றல் உடையவர் )
ஓம் மகா வித்யாயை நம ( பெருங்கல்வி உருவானவர் )
ஓம் ஜகதாம்பாயை நம ( உலகத்திற்கு அன்னை )
ஓம் ராஜராஜேச்வர்யை நம ( அனைத்திற்கும் அரசி )
ஓம் விஜயாயை நம ( வெற்றி வடிவானவர் )
ஓம் வாலாம்பிகையே நம ( இளமையானவர் )

---

44–ம் பக்க 98-ம் பாட்டின் காவல் நீறு
ஐங்கோணச் சக்கரப் படம்



உ

# சக்தி சிவனின் அருளாட்சி




ஆ. கதிர்காமத்தம்பி

( ஒடி நூலாசிரியரும், விநாயகர் அருள்கூர் சைவநூற் பதிப்பாளரும் )

வல்வெட்டி.